விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 03 சனிக்கிழமை (17.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180

# "எங்கள் தலைவன் விக்னேஸ்வரன்"

# தமிழர்கள் பேரெழுச்சி அதிர்ந்தது வடக்கு




04-ம் பக்கம்...

## முல்லையில் இன்று கண்டன போராட்டம்

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பதவி நீக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு முல்லைத் 23☛

## முதலமைச்சருடன் விரைவில் இணக்கம்

### இரா.சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் தற்போதைய முரண்பாடான நிலையை தீர்த்துக் கொள்வதற்கு தாம் தயார் எனத் 23☛

## சுமந்திரனிடம் கேளுங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக தமிழரசுக் கட்சியினால் முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் சுமந்திரனிடமே முடிவை கேளுங்கள் என வட 23☛

## இணக்க முயற்சியில் பாராளு. உறுப்பினர்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக நேற்று முன்தினம் த.சித்தார்த்தன், இரா. சம்பந்தனின் ஏற்பாட்டில் முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்தித்ததுடன் இருவருக்குமிடையில் தொலைபேசித் தொடர்பையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

இதனிடையே நேற்றைய தினம் பாரா 23☛

## கடமையை செய்பவனுக்கு வெற்றி, தோல்வி இல்லை

### மக்கள் பேரெழுச்சியில் முதல்வர் உரை



**கொழும்பில் சதித்திட்டம்**

(யாழ்ப்பாணம்)

கடமையைச் செய்யும் ஒருவனுக்குத் தோல்வியும் இல்லை 24☛

## மக்கள் புரட்சி நன்றி பகிர்வு

(யாழ்ப்பாணம்)

தமிழரசுக்கட்சியின் நிலைப்பாட்டைக் கண்டித்து வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக வடக்கில் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் 23☛

## புலம்பெயர்ந்தோர் விக்னேஸ்வரனுக்கு பேராதரவு

(யாழ்ப்பாணம்)

உலக நாடுகள் அனைத்திலும் உள்ள தமிழர்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கைகளை பலப்படுத்துவோம் என 23☛

# முதல்வரை வீழ்த்த நடந்த சதி

## அஸ்மின், ஆனோல்ட், சயந்தன் துரோகப் பின்னணி பகிரங்கமாக வெளிப்படுத்தினார் — விந்தன்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கென அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவிடம் வடமாகாணசபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் சமர்ப்பித்திருந்த இரகசிய 23☛

## கடையடைப்பு மக்களின் கண்டனங்கள்



மேலும் படங்கள் செய்திகள் உள்ளே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலுக்கு எதிரான செயற்பாடே தமிழரசுக் கட்சியின் நடவடிக்கை

## சுமந்திரன் எம்.பி அறிக்கை

(கொழும்பு)

இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பித்தமை, ஊழல், பண மோசடி மற்றும் இலஞ்சத்திற்கு எதிரான எமது தீவிரமான செயற்பாடே ஆகும். முதலமைச்சர் ஊழலுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளை நாங்கள் தடுக்க முயல்கிறோம என்ற குற்றச்சாட்டு ஆதார மற்றதும் உண்மையான நிலைமைக்கு நேர் எதிரானதுமாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் நேற்றைய தினம் விடுத்த விசேட ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு.

ஆரம்பத்திலிருந்தே அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராக பல ஊழல்குற்றச்சாட்டுக்கள் வெளிவந்தபோது அதற்கு எதிராக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எமது உறுப்பினர்கள் குரல் கொடுத்து வந்தனர். தனக்கு மிகவும் நெருக்கமானவரான ஐங்கரநேசனுக்கு எதிராக முதலமைச்சர் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல்விட்ட போது முதலமைச்சரை வற்புறுத்தி மாகாண சபையிலே ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கும் எமது உறுப்பினர்களே காரணமாக இருந்தார்கள். அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அடுத்த நாளே ஐங்கரநேசன் குற்றமற்றவர் என்றும் அவர் பனங்காட்டு நரி இந்த சலசலப்புக்கெல்லாம் அஞ்ச மாட்டார் என்று சொன்னதை எவரும் மறந்திருக்க முடியாது. எமது வற்புறுத்தலின் காரணமாகத் தான் விசாரணைக்குழுவும் அமைக்கப்பட்டது.

அந்தவேளையிலும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஐங்கரநேசனுக்கு எதிராக மட்டுமே இருந்தன. அப்படியிருந்தும் அவரை பாதுகாக்கும் முகமாகவே எல்லா அமைச்சர்களுக்கு எதிராகவும் விசா ரணை நடத்தப்பட்டது. விசாரணைக் குழுவினரை முதலமைச்சரே தனி யாக தேர்ந்தெடுத்து. நியமித்தார்.

இறுதியில் ஐங்கரநேசன் மட்டுமே ஊழல் பணமோசடி மற்றும் இலஞ்ச குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளியாக காணப்பட்டார். அமைச்சர் குருகுலராசா அதிகார வரம்பை மீறினார் என்றும் அதிகார துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளியாக காணப்பட்டார். மற்றைய இரண்டு அமைச்சர்களும் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஆரம்பத்திலிருந்தே கொண்டிருந்த நிலைப்பாடு முதலமைச்சர் நியமித்த குழு அறிக்கை மூலமாகவும் ஊர்ஜிதமானது. மே மாதம் 19ஆம் திகதி முதலமைச்சரிடம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டிருந்த போதும் குற்றவாளிகளாக காணப்பட்ட 2 அமைச்சர்களையும் பாதுகாக்கும் முகமாக முதலமைச்சர் அவ்வறிக்கையை மறைத்து வைத்திருந்தார். இருபத்திரிகைகள் அதை வெளிப்படுத்திய பின்தான் மாகாண சபையில் இவ்வறிக்கையை சமர்ப்பித்தார். இதன் பொழுதெல்லாம் ஊழலையும் குற்றவாளிகளையும் காப்பாற்ற முதலமைச்சர் எடுத்த இம் முயறசிகளுக்கெதிராக எமது உறுப்பினர்கள் குரல் கொடுத்து வந்தனர்.

குற்றவாளிகளாக காணப்பட்ட அமைசசர்களுக்கெதிரான நடவடிககையை முதலமைச்சர் எடுக்க வேண்டும்என்றும்அதில்நாம்தலையிடமாட்டோம் என்றும் பகிரங்கமாகவே அறிவித்திருந்தோம்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸவரன் குற்றவாளிகளை காப்பாற்றும் தனது முயற்சியை இவ்வேளையில் வேறுவிதமாக முன்னெடுத்தார். குற்றவாளிகளாக காணப்பட்ட அமைச்சர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்காமல் தவிர்த்து அமைச்சர்கள் நால்வரையும் பதவி நீக்கம் செய்யும் தனது யோசனையை முன் வைத்தார். குற்றவாளிகளையும் குற்றங்களிலிருந்து விடுவிக்கப் பட்டவர்களையும் ஒன்றாக பதவி நீக்கம் செய்வதென்பது குற்றங்களை நீர்த்துப்போகப் பண்ணி குற்றவாளிகளை காப்பாற்றும் ஒரு நடவ்டிக்கையே ஆகும்.

தனது இந்த யோசனையை இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரைத் தவிர்த்து மற்றைய கட்சித் தலைவர்களுக்கு மட்டும் வெளிப்படுத்தியிருந்தார். இதைக் குறித்து தமிழ் தேசியக் கூட்ட மைப்புத் தலைவர் வினவிய பின்னர்தான் காலம் தாழ்த்தி சேனாதிராசாவுடனும் பேசினார். ஊழலுக்கு எதிராக அவர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சித் தலைவர் முதலமைச்சருக்கு கூறியிருந்தார். நால்வரையும் ஒன்றாக நீக்குவதென்பது நிரூபிக்கப்பட்ட குற்றங்களை மழுங்கடிக்கும் செயல் என்றும் அதை ஏற்றுக கொள்ள முடியாது என்றும் அவ ருக்கு கூறப்பட்டது.

இதே நிலைப்பாட்டையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனும் அவருக்கு கூறியிருந்தார்.

ஊழலுக்கு எதிரான கடும் நடவடிக்கையாக குற்றவாளிகளாகக் காணப்பட்ட அமைச்சர்களுக்கு எதிராக மட்டும் செயற்பட வேண்டும் என்று சம்பந்தனும் சேனாதிராசாவும் கூறிய கருத்துக்கு மறுநாள் மாகாண சபை உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் அறிந்த பின் பதிலளிப்பேன் என்று சொன்ன முதலமைச்சர் அப்படிச் செய்யாமல் அடுத்த நாள் மாகாண சபையிலே தன்னுடைய தீர்ப்பை வழங்கினார். நால்வரும் குற்றவாளிகள் என்ற பொய்யான விம்பத்தை தோற்றுவித்து உண்மையான குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சியே இது. அதனால்தான் அனைத்து குற்றங்களிலிருந்தும் விடுக்கப்பட்ட இரு அமைச்சர்களையும் கட்டாயவிடு முறையில் செல்லுமாறு பணித்தமைக்கு எமது எதிர்ப்பைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தோம்.

ஊழலை மறைத்து குற்றவாளிகளைக் காப்பாற்றும் முதலமைச்சரின் இந்தத் தொடர்ச்சியான செயற்பாட்டின் நிமிர்த்தமாகவே இலங்கை தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சரில் நம்பிக்கை இழந்திருக்கின்றனர் இதுவே எமது உண்மையான நிலைப்பாடாகும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ

# நல்லை ஆதீனம், யாழ்.ஆயருடன் வடக்கு முதல்வர் நேற்று சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கின் சமகால அரசியல் நிலைமை தொடர்பில் மதத் தலைவர்களுடனான அவசர சந்திப் பொன்றினை வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றைய தினம் மேற்கொண்டிருந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானத்தை இலங்கை தமிழரசுக் கட்சி கொண்டு வந்தமையால் தமிழ் மக்கள் மத்தியில் கடும் ஆவேசத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் மதத்தலைவர்களின் அவசர அழைப்பின் பெயரில் நேற்று நண்பகல் யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசத்தை ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

தொடர்ந்து நேற்றைய தினம் மாலை வேளையில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை அவரது ஆதீனத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.



வடக்கில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை தொடர்பிலேயே மேற்குறித்த அவசர சந்திப்பு மதத் தலைவர்களுடன் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பில் முதலமைச்சருடன் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வட மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன், பா.கஜதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (செ-9)

# மோ.சைக்கிள் - ஹயஸ் விபத்து; இரு இளைஞர்கள் படுகாயம்



(பரந்தன்)

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் ஒரு இளைஞனின் கால் முறிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

டிப்போ சந்தியில் இருந்து கனகபுரம் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை அம்பாள்குள வீதியில் இருந்து கனகபுரம் பிரதான பாதை ஊடாக டிப்போ சந்திப் பக்கமாக திரும்பிய ஹயஸ் வாகனத்தின் பின்பகுதியில் மோதுண்டதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் கனகபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-312)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

**செல்வநாயகம் ராஜராஜன்**



மலர்வு:05.04.1976

உதிர்வு:05.05.2017

எமது குடும்பத் தலைவர் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து எமது இல்லத்துக்கு வருகை தந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11.00 மணிக்கும் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்

ஐயனார் குடியிருப்பு,
முள்ளியவளை.

(C-8816)

- குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் முதல்வன் விக்னேஸ்வரனே!







வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கு ஆதரவாக நல்லூர்க்கந்தன் ஆலயம் முன்பாகவும் கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாகவும் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து நேற்றுக்காலை பாரிய போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.... மேலும் படங்கள், செய்திகள் உள்ளே.







## முற்றாக முடங்கியது வடக்கு




யாழ்.நகர்ப்பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பான ஆட்டத்திற்காக பங்களாதேஷ் பெருமை கொள்ளலாம் - சங்கா புகழாரம்





ஐ.சி.சி. சம்பியன்ஸ் தொடரில் தங்களது சிறப்பான ஆட்டத்திற்காக பங்களாதேஷ் அணி பெருமை கொள்ளலாம் என்று இலங்கை அணியின் முன்னாள் வீரர் சங்ககார தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்தியாவுக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணி 9 விக்கெட் வித்தியாசத்தி தோல்வி அடைந்து வெளியேறியது.


பங்களாதேஷ் அணி லீக் சுற்றில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் மழை காரணமாக தப்பித்தாலும், நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய அணிகள் லீக் சுற்றில் வெளியேறிய நிலையில் பங்களாதேஷ் அணி அரையிறுதி வரை சென்றது.

இந்நிலையில், ஐ.சி.சி. சம்பியன்ஸ் தொடரில் தங்களது சிறப்பான ஆட்டத்திற்காக பங்களாதேஷ் அணி பெருமை கொள்ளலாம் என்று இலங்கை அணியின் முன்னாள் வீரர் சங்ககார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், இந்த போட்டியில் பங்களாதேஷ் அனைத்து துறைகளிலும் சிறப்பாக விளையாடியது. அவுஸ்திரேலியா உடனான தொடருக்காக அந்த அணி நம்பிக்கையுடன் டாக்கா திரும்புகிறது. அதேபோல், 2019ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பையில் தந்திரமான திட்டமிடலுடன் தீவிர போட்டியாளர்களாக இருக்க வேண்டும்.

தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தால் இரண்டு பெரிய ஐ.சி.சி தொடர்களில் நாக்-அவுட் சுற்றுவரை பங்களாதேஷ் அணி சென்றுள்ளது. பயிற்சியாளர் மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சங்கத்தின் முழு ஒத்துழைப்பு, முன்னாள் அணித் தலைவர் ஷகிப் அல் ஹசன் தலைமையிலான மூத்த வீரர்களின் சிறப்பான ஆடடத்தால் அந்த அணி அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது என்றார்.

# இந்தோனேசிய சுப்பர் சீரிஸ் பட்மிண்டன்; பிரனோய், ஸ்ரீகாந்த் அரையிறுதிக்குள்





இந்தோனேசிய சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் தொடரில், இந்திய வீரர்கள் எச்.எஸ்.பிரனோய மற்றும் கிதாம்பி ஸ்ரீகாந்த் ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினர்.

இந்தோனேசியாவின் ஜகார்தா நகரில் இந்தோனேசிய சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதில், இந்தியாவின் முன்னணி வீராங்கனை சாய்னா நேவால் 2ம் சுற்றுடன் வெளியேறிய நிலையில், ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் இந்திய வீரர்கள் முன்னேறி வருகின்றனர்.

அவ்வகையில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்திய வீரர் கிதாம்பி ஸ்ரீகாந்த், சீன தைபே வீரர் சூ வெய் வாங்கை 21-15, 21-14 என்ற செட்கணக்கில் வீழ்த்தினார்.

இதேபோல் மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் ஒலிம்பிக் சம்பியன் சென் லாங்கை (சீனா) இந்திய வீரர் எச்.எஸ். பிரனோய் எதிர்கொண்டார். இப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பிரனோய், 21-18, 16-21, 21-19 என வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

இதுவரை 4 முறை பிரனோய்-சென் லாங் இருவரும் நேருக்கு நேர் மோதியுள்ளனர். இதில் தொடர்ந்து மூன்று முறை லாங் வெற்றி பெற்ற நிலையில், நேற்றைய போட்டியில் பிரனோய் வெற்றி பெற்றுள்ளார்.

## தமிழர்கள் பேரெழுச்சி ...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனுக்கு எதிரான தமிழரசு கட்சியின் சதிக்கு எதிர்ப்பு தெரிவித்தும், விக்னேஸ்வரனே தொடந்தும் தமிழ் மக்களுக்கு தலைமையேற்க வேண்டும் எனவும் வலியுறுத்தியும் நேற்றைய தினம் மாபெரும் போராட்டம் நடைபெற்றுள்ளது.

இந்த போராட்டத்தோடு வடக்கு மாகாணம் தனது இயல்பான நடவடிக்கைகளை புறக்கணித்து ஹர்த்தாலையும் அனுஷ்டித்திருந்தது. இவ்வாறு தமிழர்கள் தன்னெழுச்சியினால் பேரெழுச்சி கொண்ட இப்போராட்டம் புதியதொரு மக்கள் புரட்சிக்கும் வழிவகுத்துள்ளது.

ஒரு நாள் முன்னதாக அழைப்பு என்ற போதிலும் வர்த்தகர்கள் தாமாகவே வந்து கடைகளை பூட்டியும், தனியார் அரச பேருந்து உரிமையாளர்கள் அச்சுறுத்தல்களை மீறியும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் பாடசாலைகளும் அரச அலுவலகங்களும் செயலிழந்து காணப்பட்டன. எந்தவித குழப்பங்களும் இன்றியும் போராட்டம் நடைபெற்ற போதிலும் சில இடங்களில் தமிழரசு கட்சியின் அடாவடித்தனங்கள் நடைபெற்றிருந்தன.

விக்னேஸ்வரனே எங்கள் தலைவன்! என முதலமைச்சருக்காக யாழ். நல்லூர் முன்றலில் காலை 10 மணிக்கு கூடிய மக்கள் பெரு வெள்ளம் பேரெழுச்சியுடன் ஆர்ப்பரித்துள்ளது.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த இளைஞர்கள் தலைவா, தலைமையை ஏற்றுக்கொள் என முதலமைச்சரை நோக்கி கோசம எழுப்பினார்கள்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான விசாரணையை அடுத்து இரு அமைச்சர்களையும் தாமாகவே விலகுமாறும் ஏனைய இரு அமைச்சர்களையும் இரு மாத விடுமுறையில் நிற்குமாறும்,

வடக்கு மாகாண முதலமைச்சர் உத்தர விட்டதை தொடர்ந்து, முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவந்து, அவரை பதவியிலிருந்து தூக்கியெறியும் முயற்சியில் தமிழரசு கட்சி ஈடுபட்டிருந்தது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து 15 பேரினது கையொப்பங்களுடன் நம்பிக்கையில்லா தீர்மானத்தை தமிழரசு கட்சியின் உறுப்பினரும் வடமாகண சபை அவைத்தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் கையளித்திருந்தார்.

அரசோடு கூட்டு இணைந்த தமிழரசு கட்சியின் இந்த முடிவுகளுக்கு,

வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் எதிர்ப்பு வலுப்பெற்று வரும் நிலையில், தமிழ் மக்கள் பேரவை நேற்றைய தினம் வடக்கில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

ஒரு நாளுக்கு முன்னதாகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், மக்கள் தாங்களாகவே முன்வந்து பேராதரவை முதலமைச்சருக்கு வழங்கியுள்ளனர். இதே வேளை நேற்று முன்தினம் சமூக வலைத்தளங்கள் வாயிலாக ஆதரவை திரட்டிய இளைஞர் படையணி ஒன்று, வடக்கு மாகாண சபையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியிருந்தது. இந்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திரண்டு முதலமைச்சருக்கு ஆதரவாகவும், தமிழரசு கட்சிக்கு எதிராகவும் குரல் எழுப்பியிருந்தனர். இந்த நிலையில் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஹர்த்தால் பூரணமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

முதலமைச்சருக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் பூரண ஹர்த்தாலும் மாபெரும் கண்டனப் போராட்டமும் நடைபெற்றுள்ளது. இந்த போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டதோடு, முதலமைச்சருக்கு ஆதரவாக விண்ணை பிளக்கும் வகையில் கோசங்களையும் எழுப்பியிருந்தனர். முன்னதாக காலை பத்து மணியளவில் நல்லூர் ஆலய முன்றில் ஆரம்பமாகிய போராட்டம் கோவில் வீதி வழியாக ஊர்வலமாக சென்ற பேரணி,

முதலமைச்சர் வாசஸ்தலத்தை வந்தடைந்து அங்கு கூடினார்கள். இந்த போராட்டத்தில ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் ஒன்று திரண்டு விண்ணை பிளக்க கோசம் எழுப்பி தமிழர்களின் தலைவா நீதான் என கோரியது அனைவரையும் புல்லரிக்க செய்தது.

இந்த போராட்டத்தில் யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்கள், ஊழியர் சங்கங்கள் மாணவர் ஒன்றியங்கள், மற்றும் பொது அமைப்புக்கள் ஆகிய பலதும் ஆதரவு தெரிவித்து களத்தில் இறங்கி போராடியிருந்தன.

இவ்வாறு பேரெழுச்சி கொண்ட போராட்டமாக தமிழரசு கட்சிக்கு எதிரான போராட்டமான நேற்றைய போராட்டம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இளைஞர்கள் நினைத்தால் எதனையும் எங்கேயும், எப்போதும் சாதித்து விடலாம் என பது நேற்றைய போராட்டம் ஒரு எடுத்து காட்டாகும். மக்கள் என்னோடு இருக்கின்றார்கள் என்னை யாராலும் எதுவும் செய்ய முடியாது என முதலமைச்சரை துணிய வைத்த போராட்டமாகவும் நேற்றைய போராட்டம் அமைந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

**முல்லைத்தீவு**

வடக்கு முதல்வருக்கு ஆதரவுக் கரம் நீட்டி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இடத்தை தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதேசங்களிலும் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். அத்துடன் பாடசாலைகளில் மாணவர்கள் வரவின்றி வெறிச் சோடிக் காணப்பட்டது. ஆசிரியர்கள் அநேகம் பேர் சுகவீன விடுமுறையில் நின்றதன் காரணமாக பாடசாலைகள நேர காலத்துடன் மூடப்பட்டது.

அரச திணைக்களங்களும் பணியாளர்கள் வரவின்றி வெறிச் சோடிக் காணப்பட்டது. போக்குவரத்து சேவைகள் ஒரு சில அத்தியாவசிய சேவைகளைத் தவிர்ந்த ஏனைய அனைத்து சேவைகளும் முற்றாக செயலிழந்து காணப்பட்டது. முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையாங்களுமக காலை திறக்கப்பட்ட நிலையில், வர்த்க நிலையங்களுக்கு வந்த இளைஞர்கள் வர்த்தகர்களைச் சந்தித்து கலந்துரையாடி நடைபெறும் போராட்டம் தொடர்பில் எடுத்து விளக்கியதை அடுத்து அனைத்து வர்த்தகர்களும் தமிழ் மக்களின் விடிவிற்காய் நீதிக்காகவும் அர்பணித்து சேவை ஆற்றி வரும் வடக்கு முதலமைச்சருக்கு ஆதரவாக குரல்களை தாங்கள் கொடுப்பதாக தெரிவித்து தமது வர்த்தக நிலையங்களை மூடி பூரண ஹர்த்தால் அனுஷ்டித்துள்ளனர்.

ஏ9 வீதியில் உள்ள மாங்குளம் நகரப் பகுதில் சில வர்த்தக நிலையங்களை காலையில் சில வர்த்தகர்கள் திறந்து வைத்திருந்த நிலையில், அங்கு வந்த அந்த பிரதேச இளைஞர்கள் கதவடைப்பு போராட்டத்தின் மகிமை தொடர்பில் விளக்கம் அளித் ததையடுத்து வர்த்தகர்கள் தாங்களும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்து வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். வவுனியாவில் இருந்து மல்லாவி நோக்கி பயணித்த தனியார் பேருந்து மாங்குளத்தில் வைத்து மீண்டும் வவுனியாவிற்கு இளைஞர்களால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

**கிளிநொச்சி**

முதலமைச்சருக்கு ஆதரவாக கிளிநொச்சியிலும் நேற்றைய தினம் இயல்பு முடக்கல் நடைபெற்றதோடு, ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடைபெற்றிருந்தது. இந்த போராட்டத்தில் முதலமைச்சரே தமிழ் மக்களுக்கு தலைமை ஏற்க வேண்டும். தமிழரசு கட்சியே தமிழ் மக்களுடைய மனங்களுக்கு விரோதமாக செயற்படாதே, ஊழல் அமைச்சருக்களுக்கு ஆதரவளிக்காதே என்ற கோசங்களை எழுப்பியபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தவிர கிளிநொச்சியிலும் தனியார போக்குவரத்து சேவைகள் எவையும் நடைபெறாததோடு, வர்த்தக நிலையங்களையும் பூட்டி ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். இந்த ஆதரவால் கிளிநொச்சியிலும் முதலமைச்சருக்கான ஆதரவு மேலும் அதிகரித்துள்ளது. கிளிநொச்சி மக்கள் என்றுமே முதலமைச்சருக்கு ஆதரவாகதான் இருப்பர் என போராட்டத்தின் போது மக்கள் ஆர்ப்பரித்தனர.

**வவுனியா**

வவுனியாவில் தமிழரசு கட்சியின் ஆதிக்கம் அதிகம் காணப்படுகின்ற நிலையிலும், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக வவுனியா வர்த்தர்கள் தமது கடைகளை பூட்டி ஆதரவு தெரிவித்ததுடன் கண்டன போராட்டத்யைுதம் முன்னெடுத்திருந்தனர்.

எனினும் சில இடங்களில் மட்டும் வழமை மறுப்பு நடைபெறவில்லை. பேருந்துகள் சில சேவையில் ஈடுபட்ட போதிலும் அநேகமான பேருந்துகள் சேவையில் ஈடுபடவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வவுனியாவில் உள்ள பாடசாலைகள் அரச திணைக்களங்களில் மாணவர் மற்றும் அதிகாரிகளின் வரவு மிக மிக குறைவாக காணப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. மேலும் வடக்கு முதலமைச்சரை தமிழரசு கட்சி தொடந்தும் புறக்கணித்தால் அல்லது அவருக்கு எதிராக தொடந்தும் செயற்பாடுகளை சதி முயற்சிகளை முன்னெடுத்தால் முதலமைச்சருக்கு ஆதரவாக களத்தில் இறங்கி போராடுவோம் என வவுனியா மக்கள் தாம் முன்னெடுத்த கண்டனப் போராட்டத்தில் தெரிவித்திருந்தனர்.

**மன்னார்**


மன்னாரில் பொதுமக்கள் தமது இயல்பு நிலையை முடக்கியிருந்த போதிலும், வர்த்தகர்கள் வழமை போன்று செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததை காண முடிந்தது. இதற்கு காரணம் ஹர்த்தால் அழைப்பு விடுத்தது குறுகிய காலத்திலேயே என்பதே காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. எனினும் மன்னார் மக்கள் மாலை வேளை முதலமைச்சருக்கு எதிரான தமிழரசு கட்சியின் நடவடிக்கை குறித்தும், அதனை ஒட்டி வடக்கில் நடைபெறுகின்ற போராட்டங்கள் குறித்தும்,

அறிந்து கொண்ட மன்னார் மக்கள் முதலமைச்சருக்கு ஆதரவாகவே தாம் தொடந்தும இருப்போம் என பகிரங்கமாக அறிவித்துள்ளனர். இதற்கு மன்னாரில் உள்ள பொது அமைப்புக்கள், மத அமைப்புக்கள் ஆதரவு தெரிவித துள்ளன. மேலும் தமிழரசு கட்சி தொடந்தும் இவ்வாறு செயற்பட்டால் முதலமைச்சருக்கு ஆதரவாக வீதியில் இறங்கி போராட வேண்டியிருக்கும் என அறிவித்துள்ளனர். (செ-4,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் புரட்சி வெடித்தது












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வருக்காக முடங்கியது வடக்கு









முல்லைத்தீவு





கிளிநொச்சி








பளை








முள்ளியவளை









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வருக்காக முடங்கியது வடக்கு

## யாழ். நகர்ப்பகுதி





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை



தும்பளை




கொடிகாமம்



உரும்பிராய்



காரைநகர்



கோண்டாவில்





தட்டாதெரு சந்தி

யாழ்.நகர்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சருக்கு ஆதரவாக....





சாவகச்சேரி


சங்கானை



கந்தர்மடம்





திருநெல்வேலி





ஊர்காவற்துறை





மானிப்பாய்




கல்வியங்காடு




அச்சுவேலி

வடக்கு மாகாண முதலமைச்சர் மீது தமிழரசு கட்சியால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கில் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் காரணமாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் பெரும்பாலான வியாபார நிலையங்கள் பூட்டப்பட்டிருந்ததோடு போக்குவரத்து சேவைகளும் முடங்கின. மேலும் பாடசாலைகளுக்கும் மாணவர்களின் வரவும் மிகவும் குறைவாக காணப்பட்டமையினால் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டன. அரச திணைக்களங்களிலும் உத்தியோகத்தர்களின் வரவு குறைவாக காணப்பட்டது.

**(படங்கள்:-சாளின், சோபிகா, கோபி, மகாலிங்கம், நிரோஷ், விஜயவாசன், மணிக்குமார், ஐங்கரன், தவசீலன், நிபோஜன், சுஜீவன், வசந்தரூபன், கலைச்செல்வன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சருக்கு எதிரானவர்கள்


ப.சத்தியலிங்கம்
(இலங்கைத் தமிழரசுக்கட்சி)


த.குருகுலராஜா
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)


பா.டெனீஸ்வரன்
(ரெலோ)


சீ.வீ.கே.சிவஞானம்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)


இ.ஆனோல்ட்
(இலங்கைத் தமிழரசுக்கட்சி)


கே.சயந்தன்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)


அயூப் அஸ்மின்
(நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம்)


ச.சுகிர்தன்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)



வே.சிவயோகன்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)


வி.கமலேஸ்வரன்
(இலங்கைத் தமிழரசுக்கட்சி)


அ.ஜவாஹிர்
(ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்)


அ.பிரிமுசிராய்வா
(இலங்கைத் தமிழரசுக்கட்சி)


அ.பரஞ்சோதி
(இலங்கைத் தமிழரசுக்கட்சி)


சு.பசுபதிப்பிள்ளை
(இலங்கைத் தமிழரசுக்கட்சி)


அ.பசுபதி
(இலங்கைத் தமிழரசுக்கட்சி)

## வடக்கை விடவும் தெற்கிற்கே முக்கியத்துவம் வேண்டும்

### சரத் அமுனுகம கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கின் அனர்த்தத்தை விடவும் தெற்கின் அனர்த்தத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

வடக்கின் வரட்சிக்கு மாற்றுவழி தேடுவது கடினமான விடயம் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

வெள்ளப் பாதிப்புகளில் இருந்து மீளும் வகையில் சர்வதேச நிதியுதவிகளை கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## காரியாலயமொன்றின் மீது தாக்குதல்; மூன்று பிக்குகள் உட்பட அறுவர் கைது

(கொழும்பு)

கம்பஹாவிலுள்ள காரியாலயமொன்றை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் மூன்று பிக்குகள் உட்பட ஆறுபேர் கம்பஹா பொலிஸாரினால் நேற்று முன்தினம் நண்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்ஹலே ஜாதிக இயக்கத்தின் தலைவர் சாலிய ரி. ரணவகவின் கம்பஹா முதுன்கொட வீட்டில் இருந்த காரியாலயத்தை பலவந்தமாக உடைத்து. அக்காரியா லயத்தில் இருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்ஹலே அபி அமைப்பின் தலைவராகவுள்ள தேரர் உட்பட இன்னும் இரு தேரர்கள் அடங்கலாக 6 பேர் கம்பஹா பொலிஸாரினால் நேற்று முன்தினம் நண்பகல் கைது செய்யப்பட்டு. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் நாளை மறுதினம் 19 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா மேலதிக நீதவான் லலித் கன்னங்கர உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர்களை நாளை மறுதினம் 19 ஆம் திகதிக்கு அடையாள அணிவகுப்பொன்றிற்கு உட்படுத்துமாறு கம்பஹா மேலதிக நீதவான் லலித் கன்னங்கர, மஹர சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-7)

## மகிந்தவின் 'இப்தார்'



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்திருந்த "இப்தார்" நோன்பு திறக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வெளிநாட்டுத் தூதுவர்கள், மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-7)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாதத இராசி பலன்கள்

## 15.06.2017-16.07.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



நெளிவு சுளிவுகளைக் கற்று நேர்த்தியாக வாழும் மிதுன இராசி அன்பர்களே!

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரோடு 3இற்கு அதிபதியான சூரியனும் 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயும் இணைந்திருக்கின்றனர். அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கமும் இருக்கிறது. இதன் விளைவாக இம்மாதத்தில் மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து கொண்டேயிருக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும் என்றாலும் கூட, மீண்டும் பழைய நோய் தலைதூக்கலாம்.

செவ்வாய் பலம் உங்கள் இராசியிலேயே இருப்பதால், முன்கோபத்தின் காரணமாக சில காரியங்களில் முட்டுக்கட்டைகள் ஏற்படலாம். எனவே கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் திடீர் மாறுதல்களும் வந்து சேரலாம். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு குறைவாகவே கிடைக்கும். அதேநேரத்தில் அரசு வழி வேலைகளுக்கு ஏற்பாடுகள் செய்திருந்தால் அது கிடைக்கும்.

அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் இருக்கும் வரை, எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வாகனங்களில் செல்லும் பொழுது கூடுதல் கவனம் தேவை. பழைய வாகனங்களின் பழுதுச் செலவுகள் அதிகரிக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். எனவே அதைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பிறருக்கு பொறுப்புச் சொல்லி ஏதேனும் ஒரு தொகையை வாங்கிக் கொடுத்திருந்தால், அதனால் சிக்கல்கள் ஏற்படலாம்.

ஒரு சிலருக்கு வாங்கிய இடத்தை விற்கும் சூழ்நிலை உருவாகும். பத்திரப்பதிவில் ஒரு சிலருக்குத் தடைகள் ஏற்படலாம். வில்லங்கத்தோடு கூடிய இடத்தை விலைக்கு வாங்கி சிக்கல்களில் சிக்கித் தவிக்கலாம். எனவே இதுபோன்ற காலங்களில் பெரிய தொகை கொடுத்து வாங்கும் பொருட்களின் மீதும், அசையா சொத்துகள் மீதும் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

கிரகங்கள் சாதகமற்ற நிலையில் சஞ்சரிக்கும் பொழுது, பரிகாரங்கள் ஓரளவிற்கு கைகொடுக்கும். அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது கண்ணன் வழிபாடு உங்களின் கவலைகளைப் போக்கும். வெண்ணெய் உண்ணும் கண்ணன் படத்தை வீட்டு பூஜையறையில் வைத்து வழிபடுவதோடு, ஒவ்வொரு திருவோணத்தன்றும் அவல் நைவேத்தியம் படைத்து வணங்கினால் உங்களின் ஆவல்கள் பூர்த்தியாகும்.

ரிஷப சுக்ரன் சஞ்சாரம்

ஜூன் 29ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்ரன் செல்கிறார். இந்தக் காலத்தில் கூடுதலாக விரயத்தைச் சந்திக்க நேரிடும். குறிப்பாக பஞ்சம விரயாதிபதியான சுக்ரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போவதால், பிள்ளைகள் வழியில் ஒரு பெரும் செலவு வந்து சேரலாம். அவர்களின் கல்வி முன்னேற்றம் கருதியும் செலவிடலாம். கல்யாண காரியத்தை முன்னிட்டும் செலவிடலாம். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. விலை உயர்ந்த மின்சா தனப் பொருட்களை




வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

கடக புதன் சஞ்சாரம்

ஜூலை முதலாம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்களுக்கு இது ஒரு பொற்காலமாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். நாலா புறமும் இருந்து நல்ல தகவல் வந்து சேரும். சீரான வாழ்க்கை அமைய சிலர் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர். இராசிநாதன் 2இல்சஞ் சரிக்கும்இந்த நேரத்தில் புத்துணர்ச்சியோடு செயற்பட்டு பொருள் வரவைப் பெருக்கிக் கொள் வீர்கள். குடும்பத்தினரின் தேவைக ளைப் பூர்த்தி செய்வீர்கள்.

கடக செவ்வாய் சஞ்சாரம்!

ஜூலை 12ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அங்கு செவ்வாய் நீச்சம் பெறுவதால், ஒருவழிக்கு உங்களுக்கு நன்மை ஏற்படும். 6இற்கு அதிபதி நீச்சம் பெறுவதால் தள்ளிப் போன காரியங்கள் தானாக நடைபெறும். எள்ளி நகையாடியவர்கள் இப்பொழுது உங்களோடு வந்திணைவர். வெளிநாட்டுத் தொடர்பில் திடீரென மாற்றம் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து தாய்நாடு திரும்பும் சூழ்நிலை ஒருசிலருக்கு உண்டு. பூர்வீகச் சொத்துகளை விற்று விட்டு, புதிய சொத்துகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இந்த மாத தொடக்கத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசிக் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். மனக் குழப்பம் அகலும். மக்கள் செல்வங்களின் சுபகாரியங்களை எளிதாக முடித்து வெற்றி காண்பீர்கள். இல்லம் கட்டிக் குடியேறும் எண்ணம் மேலோங்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும். மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தை சீராக்கிக் கொள்ள இயலும். வாகனங்களால் தொல்லை உண்டு. வளர்ச்சி கூட அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். செவ்வாய் நீச்சம் பெறும் நேரம் அங்காரகனை வழிபடுவதன் மூலம் தடைகள் அகலும். இந்த மாதம் ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜரை தரிசனம் செய்வதன் மூலம் தேனான வாழ்க்கை அமையும்.

## மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து கொண்டே இருக்கும்



எதிலும் எதிர்நீச்சல் போட்டு வெற்றி காணும் கடக இராசி அன்பர்களே!

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். அதுமட்டுமல்ல, அஷ்டமத்தில் கேதுவும் 2இல் ராகுவும் வீற்றிருந்து மாதம் தொடங்குகிறது. சர்ப்பக் கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. எனவே நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக அமையும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. உதவி செய்வதாக சொன்னவர்கள், கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். ஊர் மாற்றச் சிந்தனைகளும் உத்தியோக மாற்றச் சிந்தனைகளும் தலைதூக்கும்.

விரய ஸ்தானத்தில் மூன்று கிரகங்கள் முற்றுகையிட்டு இருக்கின்றன. ஒன்று தனாதிபதி சூரியன், இரண்டு யோகாதிபதி செவ்வாய், மூன்று விரயாதிபதி புதன். மேற்கண்ட மூன்று கிரகங்களும் விரய ஸ்தானத்தில் இருப்பதால் வரவைக் காட்டிலும் செலவு கூடும். ஒருசில சமயங்களில் ஆடை, ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை விற்கும் சூழலும் வரலாம். வீண் விரயங்களில் இருந்து விடுபட வேண்டுமானால், சுபவிரயங்களை மேற்கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் கல்யாண வயதில் பெண் பிள்ளைகள் இருந்தால், அதற்குரிய சீர்வரிசைகளை வாங்கிச் சேர்க்கலாம். குடியிருக்கும் வீடு பழுதாகி இருந்தால் பராமரிக்கலாம். பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பதவி மாற்றத்திற்கோ, இலாகா மாற்றத்திற்கோ ஏற்பாடு செய்திருந்தால் அது வெற்றிகரமாக நடைபெறும்.

கன்னி இராசியில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 7,9,11 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம். குடும்பத்தில் மங்கள ஓசை கேட்கவில்லையே என்ற கவலை இனி அகலும். குடும்ப முன்னேற்றம் கருதி முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். மறதியால் சென்ற மாதத்தில் விடுபட்டுப் போன காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் நல் ஆதரவோடு உங்கள் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்க குருவின் பார்வை கைகொடுக்கிறது.

எனவே அப்படிப்பட்ட பார்வையால் பலன் கொடுக்கும் குருவைத் திருப்திப்படுத்த, சிவாலயத்திற்குச் சென்று குரு பகவானை வழிபடுவது நல்லது. மேலும் குரு பீடமாக விளங்கும் திருச்செந்தூர் மற்றும் ஆலங்குடி, திட்டை, பட்டமங்கலம் ஆகிய தலங்களுக்கு வாய்ப்பிருக்கும் போது சென்று வழிபட்டு வருவதும் நல்லது.

ரிஷப சுக்ரன் சஞ்சாரம்

ஜூன் 29ஆம் திகதி ரிஷப இராசிக்குச் சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதி சுக்ரன். அவர் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, எதிர்பார்த்த தொகை இல்லம் தேடி வரும். மதிப்பும், மரியாதையும் உயரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பழைய வாகனங்களை கொடுத்துவிட்டுப் புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கடக புதன் சஞ்சாரம்




3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். இவர் ஜூலை முதலாம் திகதி கடக இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, உடன்பிறப்புகள் வழியே ஒரு பெரும் விரயம் ஏற்படும். மாமன், மைத்துனர் வழியில் மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறுவதை முன்னிட்டு ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். சேமிப்பில் சிறிது கரையும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்க மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

கடக செவ்வாய் சஞ்சாரம்

ஜூலை 12ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அது செவ்வாய்க்கு நீச்ச வீடாகும். யோகம் செய்யும் கிரகம் நீச்சம் பெறுகிற பொழுது, ஒருசில காரியங்கள் முடிவடைவதில் தாமதமாகலாம். தாமதங்களைத் தவிடு பொடியாக்க, இறைவனின் துணை நமக்குத் தேவை. இதுபோன்ற காலங்களில் சுய ஜாதக அடிப்படையில் தெசாபுத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடுவது நல்லது. அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாறலாம். திடீரென வீண் பழிகள் கூட வந்து சேரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரப் பயணங்கள் உருவாகும். ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜரை வழிபடுவதன் மூலம் நன்மைகள் கிடைக்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

மாதத் தொடக்கத்தில் விரய ஸ்தானம் பலம்பெறுகிறது. எனவே குடும்பச்சுமை கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திப்பீர்கள். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் மனநிம்மதி இருக்காது. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச்செல்வது நல்லது. சர்ப்பக் கிரகங்களுக்கு உரிய பரிகாரங்களைச் செய்து கொண்டால் பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்டதூர மாறுதல்கள் கிடைக்கலாம். அரசியல் செல்வாக்கு மிக்க ஒருவரின் ஆலோசனைப்படி மாதக் கடைசியில் ஒருசில நன்மைகள் வந்து சேரும். ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜப் பெருமானை வழிபடுவது நல்லது. மேலும் முத்துமாரியம்மன் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

## பதவி மாற்றங்கள் வெற்றி அளிக்கும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் மனநிலை இதுவே

# வடக்கின் முதலமைச்ச

**பத்மநாதன் நாவாந்துறை**

முதலமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டால் தமிழரசுக் கட்சியில் அனைவரும் பதவி நீக்கம் செய்ததற்குச் சமம்.

**தவகுமார் சரசாலை**

முதல்வரை நீக்க யாரும் முடிவெடுக்க முடியாது. தமிழரசுக் கட்சியின் அத்தியாயம் கூண்டோடு முடியும் நேரம் வந்திட்டுது. அரசுடன் இணைந்து செயற்படும் கும்பல் எப்படி முதல்வரை நீக்கமுடியும்.

மக்களின் கருத்தை மீறி முதல்வரை நீக்கினால் அனைத்து அரசியல்வாதிகளும் வீட்டிற்குச் செல்லவேண்டி வரும்.

**ஜெயகுமார் நல்லூர்**

அரசுடன் இணைந்து சுகபோக வாழ்க்கை வாழும் தமிழரசுக் கட்சியை விரட்டியடிப்போம்.

**குலேந்திரன் வவுனியா**

செல்வநாயகத்தின் பின் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு தகுதி வாய்ந்த தலைவர் கிடைத்துள்ளார். அவரை இவ்வாறு உதாசீனம் செய்வது மிகவும் மன வருத்தமானது.

**றேகன் கீரிமலை**

வடமாகாண சபையில் மிகவும் தேர்ச்சியான, நேர்மையான, நீதியான தலைவர். இவர் மீதான தண்டனை அபாண்டமான குற்றச்சாட்டு. புத்திஜீவிகள் வெளியேற அனுமதிக்க மாட்டோம்.

**சுதர்சன் சுழிபுரம்**

தனித்துவம் மிக்க தலைவராக வளர்வதைப் பொறுக்காதவர்கள் அவர்மீது அபாண்டமாக பழி சுமத்தியுள்ளார்கள்.

**குமாரவேல் மக்கள் சக்தி அமைப்பு**

தமிழர்களுக்கு இருக்கும் ஒரேயொரு சொத்து, குரலாக இருப்பவர் சி.வி. விக்னேஸ்வரன். இது இலங்கை அரசாங்கத்தின சதி வேலை. அத்துடன் தமிழரசுக் கட்சி, சம்பந்தன், சுமந்திரனின் தனிப்பட்ட செயலாக இருக்கிறது. தமிழ் மக்களின் சொத்தான இவர் உள்நாட்டில், வெளிநாட்டில் அனைத்தையும் கூறிவருகிறார். அவர் முதலமைச்சராக இருக்க வேண்டும்.

**விஜயகுமார் பருத்தித்துறை**

தமிழருக்குக் கிடைத்த வரப்பிரசாதம். உலக நாடுகளுக்கு தமிழரின் நிலையை எடுத்துக் கூறியவர். தமிழரசுக் கட்சிக்கு அது பிடிக்கவில்லை. தமிழரசுக் கட்சி அழிவை எதிர்நோக்கும்.

**சயந்தன் யாழ்ப்பாணம்**

முதலமைச்சர் செய்வது சரி. தேர்தல் தான் பதில் சொல்லும் தமிழரசுக் கட்சி அழிவைச் சந்திக்கப் போகிறது.

**மா.பி.தாசன் சுன்னாகம்**

நாங்கள் வேலையை விட்டுவிட்டு கால்கடுக்க நின்று வாக்களித்து எமக்கு பிடித்தவரை முதல்வராகத் தெரிவு செய்ய மார்ட்டின் வீதியில் இரவு ஒன்றுகூடி இவரை நீக்கி விடுவார்களாம். இவர்களது கொழும்பு எஜமானரை திருப்திப்படுத்தவா? மாகாண அமைச்சர் செய்த ஊழலில் தமிழரசுக் கட்சிக்கும் பங்கிருக்கா?

**விக்னேஸ்வரன் தொல்புரம்**

முதலமைச்சர் ஓர் நீதியரசர். அவருக்கு நீதி தெரியும். அரசுடன் இணைந்து கொண்டு தமிழரசுக் கட்சி தவறு இழைக்கிறது.

**தயாளன் கிளிநொச்சி**

அமைச்சருக்கு ஆதரவானவர்களை ஒன்று திரட்டி பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும்.

**பரமேஸ்வரன் வவுனியா**

பதவி நீக்க முடியாது. ஓரணியாக திரள்வோம்.

**யூட் மணிவண்ணன் கிளிநொச்சி**

தண்டனை வழங்கியவருக்கு தண்டனை அளிக்கப்பட்டவர்களே தண்டனை கொடுத்திருப்பது கேளிக்கைக்குரியது.

**கணபதிப்பிள்ளை மாங்குளம்**

வடமாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுக்க வேண்டும்.

**மோகன் புதுக்குடியிருப்பு**

பாராளுமன்றம் அனுப்பியது எங்களது குறைகளைக் கேட்டறிந்து தீர்க்கவே. தவிர தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதற்காக அல்ல.

**அல்பிரட்- டானியல் மயிலங்குளம்/ ஓமந்தை**

முள்ளிவாய்க்காலில் மக்கள் துன்பப்படும் போது எட்டிப்பார்க்காத தமிழரசுக் கட்சி இப்போது எங்களுக்காகப் பேசும் முதலமைச்சரை பதவி விலக்குவது எந்த வகையில் நியாயம். இதை நான் முற்றாக எதிர்க்கிறேன்.

**குகன் கிளிநொச்சி**

இலங்கை அரசுடன் தமிழரசுக் கட்சியின் கபட நாடகம். முள்ளிவாய்க்காலுக்கு பிறகு நாம் அதிகம் கவலை கொள்கிறேன். எமது முதல்வர் எமக்கு வேண்டும்.

**ஞானேந்திரன் அரியாலை**

பதவி நீக்கம் செய்யக்கூடாது.

**ஸ்ரீஸ்கந்தராசா நாவாந்துறை**

முதலமைச்சரின் முடிவு வரவேற்கத்தக்கது. எதிர்வரும் காலங்களில் தமிழரசுக் கட்சி இருந்த இடம் தெரியாமல் போய்விடக்கூடும்.

**அரசகுமார் உடுவில்**

தமிழரசுக் கட்சியினர் நேர்மைக்கும் நீதிக்கும் எதிராக செயற்படுகிறார்கள். ஊழலை வளர்க்கிறார்கள். முதலமைச்சரை பதவி நீக்கும் தகுதி இவர்களுக்கில்லை.

**செந்தில்நாதன்**

விக்னேஸ்வரன் எடுத்த முடிவு சரியான முடிவு. தமிழரசுக் கட்சி கீழ்த்தரமான முடிவு எடுத்தது. தமிழரசுக் கட்சி தமிழரின் ஒற்றுமையைக் குழப்புகிறது. 2020 இல் ஏற்படப் போகும் தாக்கத்தை தமிழரசுக் கட்சி ஏற்கும்.

**சிதம்பரநாதன் பருத்தித்துறை**

முதலமைச்சரை மா்ற்ற தமிழரசுக் கட்சிக்கு அதிகாரம் இல்லை. அனைத்துக் கட்சியின் சம்மதத்துடன் வந்தவர்.

மக்களால் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டவர்.

அவரை நீக்க இவர்களால் முடியாது. நாங்கள் தேசிய தலைவராக விக்னேஸ்வரனைப் பார்க்கிறோம்.

**அருள்குமார் வவுனியா**

நாங்கள் வாக்களித்தது முதலமைச்சருக்கே. தமிழரசுக் கட்சிக்கல்ல. அமைச்சரை நீக்கினால் தமிழரசுக் கட்சிக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமார் வட்டுக்கோட்டை**

அமைச்சரை நீக்கினால் பெரும் கலவரம் நடைபெறும்.

**இதயகுமார் கைதடி**

தமிழர் பிரச்சினைகளை உலகறியச் செய்த தமிழர் தலைவரை நீக்கினால் தமிழரசுக் கட்சிக்கு எவ்வித உதவிகளும் கிடைக்காது.

**ஸ்ரீதரன் நல்லூர்**

முதலமைச்சருக்கு ஆதரவாக செய்யும் எந்த நடவடிக்கைக்கும் நான் பூரண ஆதரவு தருவேன்.

**கரவைதாசன் கரவெட்டி**

புரியாமல் பேசுபவன்தான் அரசியல்வாதி என்பார்கள். அதேபோல் தமிழரசுக் கட்சியும் புரியாமல் பேசியே அரசியல் செய்கின்றது.

**ஞானேந்திரன் வல்வெட்டி**

முதலமைச்சருக்கு ஆதரவான போராட்டங்களில் ஈடுபட பூரண ஆதரவு தரப்படும்.

**ராஜலிங்கம் வட்டுக்கோட்டை**

தமிழினம் அழிந்தாலும் தங்கள் தலைமையில் அழிய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்களே தமிழரசுக் கட்சியினர்.

**நவிண்டில்நாதன் வடமராட்சி**

முதலமைச்சருக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை சீர்குலைக்கவே இவ்வாறு செய்கிறது சீர்கெட்ட தமிழரசுக் கட்சி.

**செல்வசந்திரன் புதுக்குடியிருப்பு**

கையெழுத்திட்ட அனைவரும் வீட்டுக்குப் போக வேண்டியவர்களே.

**ஜோன்சன் அல்லைப்பிட்டி**

நீதியரசரை இழக்க விரும்பவில்லை. இது ஒரு தவறான விடயம்.

**எஸ்.கே.நாதன் உரும்பிராய்**

அரசாங்கத்துக்கு ஒட்டுண்ணியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிக்கு முதலமைச்சரை மாற்றும் தகுதியில்லை.

**ராஜேந்திரம் கிளிநொச்சி**

தமிழர்களுக்கானவர்கள் அல்லர். தமிழர் பெயரைச் சொல்லி அரசியல் நடத்தும் ஒரு கட்சியினரே தமிழரசுக் கட்சி.

**திருச்செல்வம் மாங்குளம்**

பதவியிலிருந்து நீக்கினாலும் முதலமைச்சருக்கே எங்கள் ஆதரவு ஊழல்வாதிகளுக்கு அல்ல.

**சுப்பிரமணியம் மிருசுவில்**

எழுக தமிழ் போன்று ஓர் பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும்.

**துரைலிங்கம் கிளிநொச்சி**

99 சதவீதமானவர்கள் கடும் கோபத்துடன் இருக்கிறார்கள். முதலமைச்சரை நீக்க வேண்டாம்.

**சசிகரன் பண்டத்தரிப்பு**

முதலமைச்சரை நீக்குவது தவறான விடயம்.

**கஜித் நவாலி**

தமிழர்க்கான சரியான தலைமை இல்லாமல் போய்விடும்.

**சிற்சபேசன் கிளிநொச்சி**

விக்னேஸ்வரன் ஐயாவை அரசியலுக்கு கொண்டு வந்து அவரைக் கொச்சைப்படுத்தி விட்டார்கள். அனைவரையும் மாற்ற வேண்டும்.



வா

தவ

# ...சர் விக்னேஸ்வரனே!

# தமிழ் மக்களின் மனங்களில் இவரே

02



**ராஜதுரை** · **பருத்தித்துறை**

தமிழர்களுக்கான போராட்டங்களில் ஈடுபடாத தமிழரசுக் கட்சிக்கு எமது தலைவரை நீக்கத் தகுதியில்லை.

**ராஜன்** **கொக்குவில்**

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும்.

**கைதடி** **கிருபா**

நூற்றுக்கு நூறு தமிழருக்கு பொருத்தமானவர்கள் எமது முதலமைச்சரே. அவரை நீக்குவதற்கு மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

**குணசீலன்** **முல்லைத்தீவு**

விக்னேஸ்வரனுக்கு முழு ஆதரவு தெரிவிப்போம். தமிழரசுக் கட்சியை இனி ஆதரியோம்.

**நித்தியானந்தம்** **கந்தர்மடம்**

முதலமைச்சருக்கு எதிராக தமிழரசுக் கட்சி எடுத்த முடிவு கோழைத் தனமானது. அவர் பின் முதுகில் குத்துகிறார்கள். ஒரு இலட்சத்து முப்பதாயிரம் வாக்குகளுக்கு மேல் அளித்த நாங்கள் மடையர்களா?

**அருட்செல்வன்** **முல்லைத்தீவு**

தமிழர்களின் அடையாளமாக இருக்கும் முதலமைச்சர் எடுத்த தீர்மானத்தினால்தான் தமிழரசுக்கட்சி அவரை நீக்குமானால் அது மாபெரும் தவறு. தவறு செய்தவர்கள் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும்.

**குணராஜ்** **வல்வெட்டித்துறை**

தமிழ்மக்கள் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சியை ஒதுக்கி முதலமைச்சர் தலைமையில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படவேண்டும்.

**சத்தியேந்திரா** **அரியாலை**

முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு கிடைத்த பொக்கிஷம். சலசலப்புக்கு அஞ்சி வளைந்து கொடுக்கும் நாணற்புல் அல்ல எமது முதலமைச்சர்.

**நாதன்** **நவிண்டில்**

பிரபாகரன் வீடு கட்டியது சுத்தமானவர் இருப்பதற்கே தவிர ஊழல்வாதிகள், கேவலமானவர்கள் இருப்பதற்கு அல்ல.

**யசோதரன்** **கிளிநொச்சி**

முதலமைச்சரை நீக்கினால் வடகிழக்கு வாழ் இளைஞர்களின் எதிர்ப்பு கடுமையாக இருக்கும்.

**யாழ்.உயர் பட்டப்படிப்பு மாணவர்கள்** **ஐ.அமெரிக்கா**

வடக்கின் மாண்புமிகு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக இலங்கை தமிழரசுக் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானமானது தமிழ் மக்களுக்கும் அவர்களின் அரசியல் அபிலாஷைகளுக்கும் எதிரான படுதுரோகச் செயலாகும். நீதியின்வழி செயற்படும் முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு இந்தவேளையில் எங்கள் ஆதரவை தெரிவித்துக்கொள்வதோடு, எமது மக்களாலேயே தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக் கட்சி இதன் பிரதிபலன்களை விரைவில் அனுபவிக்கும் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

BE STRONG CM, WE ARE WITH YOU.

**இ.ஈஸ்வரன்** **யாழ்.பல்கலைக்கழகம்**

தமிழரின் தலைவிதி தான் என்ன?

1.கௌரவ முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் ஐயா அவர்களை பதவியில் இருந்து நீக்குவதற்கு இலங்கை தமிழ் அரசுக்கட்சி எடுத்த தீர்மானமானது கண்டிக்கத்தக்கதாகும்.

2.தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவையும் அன்பையும் பெற்ற மக்கள் முதலமைச்சரை நீக்கினால் தமிழர் தாயகத்தில் இருந்து தமிழரசுக்கட்சி துடைத்தெறியப்படும்.

3. ஊழலில் ஊடலாடுபவர்களுக்கு துணைபோகின்ற இந்த தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்ததை இட்டு நாணம் கொள்கின்றேன்.

**எஸ்.தூயவன்** **வவுனியா**

முதலமைச்சரை பதவியில் அமர்த்தியது மக்கள். அவர் பதவியில் இருக்கவேண்டுமா? இருக்கக்கூடாதா? என மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். முதலமைச்சரரை பதவியில் இருந்து விலக்கினால் தமிழ் அரசு கட்சி உறுப்பினர்கள் அடுத்த தேர்தலுடன் வீட்டில் இருக்க நேரிடும்.

**சுபிகுட்டி** **கருணையூர்**

தலைவனால் கிடைத்த தமிழரசு கட்சிக்கு சிறந்த தலைவன் எங்கள் விக்னேஸ்வரன் ஐயா. அவரை நீக்க யாருக்கும் தகுதி இல்லை.

**ஜீவா** **உடுவில்**

விக்னேஸ்வரன் ஐயாவே தமிழ் இனத்தின் தலைவர், காவலன்.

**சசி** **ஓமந்தை**

முதல்வருக்கு எதிரானவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

**ஜி.இளம்பரிதி** **இமையாணன்**

கூட்டமைப்பிற்கு ஒரு எச்சரிக்கை. அடுத்த தடவை தேர்தலுக்கு வடமராட்சிக்கு வராதீர்கள்.

**விஜய்தரன்**

முதல்வரை பதவி நீக்கினால் மீண்டும் தமிழ் மண்ணில் தமிழரசுக் கட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடிக்கும்.

**மாதவன்** **இணுவில்**

வீட்டுக்கு வேட்டு, விக்கி ஐயாவுக்கே எங்கள் வாக்கு.

**சதீஸ்** **வேலணை**

ஒரு குடையின் கீழ் அரசாட்சி நடத்திவரும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்து தமிழர்களது அரசியல் பலத்தை மழுங்கடிப்பதற் கான செயற்றிட்டம் தென்னிலங்கையில் இருந்து செயற்படுத்தப்பட்டு வடக்கில் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. இதற்காக ஆதரவளித்து வரும் கோமாளிகளுக்கு எனது வாழ்த்துக்களையும் எதிராக போராட்டங்களில் ஈடுபடும் மக்களுக்கு அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தர்மலிங்கம்** **காரைநகர்**

விசாரணை நடத்தப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுத்தது தவறா?

**சிவலிங்கம்** **சங்கானை**

தெய்வத்திற்கு நிகரான எமது முதலமைச்சரை நீக்குவதற்கு மானமுள்ள எந்தத் தமிழனும் சம்மதிக்கமாட்டான்.

**மனோ** **அக்கராயன்**

தலைவருக்கு அடுத்தபடியாக தமிழருக்காகக் குரல் கொடுப்பவர் எமது முதலமைச்சரே. அவரை நீக்கினால் புரட்சி வெடிக்கும்.

**வரதன்** · **வட்டுக்கோட்டை**


சுகபோகம் அனுபவிக்கும் தமிழரசுக் கட்சி வேண்டாம். அடுத்த தேர்தலில் பாடம் புகட்டுவோம்.


(திங்கள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சரை பழிவாங்கும் தமிழரசுக்கட்சி; அரசுக் கூட்டுச் சதியை முறியடிப்போம்

## வவுனியாவில் சுவரொட்டிகள், கறுப்புக் கொடிகள்






(குருமன்காடு)

வவுனியாவில் முதலமைச்சருக்கு ஆதரவாகவும் தமிழரசுக் கட்சிக்கு எதிராகவும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தின் சில இடங்களில் வடக்கு மாகாண முதலமைச்சரைப் பழிவாங்கும் தமிழரசுக்கட்சி எனும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளே ஒட்டப்பட்டுள்ளன.

முதலமைச்சரைப் பழிவாங்கும் தமிழரசுக்கட்சி அரசுக் கூட்டுச்சதியை முறியடிப்போம்" எனும் தமிழரசுக் கட்சிக்கு எதிரான வாசகங்கள் தாங்கி சுவரொட்டிகள் வன்னி மக்கள் எனும் பெயரில் ஒட்டப்பட்டுள்ளன. அத்துடன் சில பகுதிகளில் கறுப்பு கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன.

வடக்குமாகாணமுதலமைச்சருக்கு எதிராக தமிழரசுக் கட்சியினாலும், சில அரச தரப்பு வடக்கு மாகாணசபை உறுப்பினர்களாலும் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து பல இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அதன் ஒரு கட்டமாக முதலமைச்சருக்கு ஆதரவாக இந்த சுவரொட்டிகள் வவுனியாவில் ஒட்டப்பட்டுள்ளதுடன், பல இடங்களில் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டு பறக்க விடப்பட்டுள்ளன. (2-250)




### நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிர்ப்பு

## முதலமைச்சருக்கு ஆதரவாக போராட்டத்தில் குதிக்க வவு. பொது அமைப்புக்கள் முடிவு

வடக்கு முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுத்தனர்.

குறித்த கலந்துரையாடல் வவுனியா விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது தமிழ் மக்களின் தேசிய கொள்கையுடன் செயற்பட்ட வடக்கு மாகாண முதலமைச்சரை பதவியில் இருந்து அகற்றுவதற்கு தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதனை தடுக்க தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அணிதிரள வேண்டுமென பல்வேறு விவாதங்கள் நடைபெற்றன.

முதலமைச்சரை மாகாண சபையிலிருந்து வெளியேற்றுவதற்கு முழுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றோம். தமிழரசுக் கட்சி மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து மிகப் பெரிய தவறு ஒன்றை செய்து கொண்டிருக்கின்றது. இதனை அனுமதிக்க முடியாது எனவும் குறித்த பொது அமைப்புக்கள் தீர்மானித்திருந்தன.

வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைச்சர், முதலமைச்சரை வெளியேற்றுவதற்கு ஆதரவு தெரிவித்தால் அவரது வீட்டை முற்றுகையிடுவதாகவும் முடிவெடுக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் இவ்வாறான செயற்பாட்டால் வவுனியா வாழ் மக்கள் கவலையடைகின்றனர் எனத் தெரிவித்த பொது அமைப்புக்கள், வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் மட்டுமே. அவருக்காக வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபடும் எனவும் தெரிவித்தனர். (2-250)

## முதலமைச்சருக்கு ஆதரவாக முல்லையில் இன்று கவனயீர்ப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக கவனயீர்ப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படவுள்ளது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கவனயீர்ப்பு நடவடிக்கையில் அனைவரையும் அணிதிரளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

## மதகுரு உட்பட இருவர் மரணம்; 4 பேர் காயம்

### பூணாவையில் சம்பவம்



(குருமன்காடு)

மதவாச்சி பூணாவை பகுதியில் ஏற்பட்ட விபத்தில் மதகுரு உட்பட இருவர் பலியானதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர் என மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் நடைபெற்றது. இது தொடர்பில் தெரிய வருவதாவது.

மதவாச்சி பகுதியில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த வான் எதிர்த்திசையில் பயணித்த ஆட்டோவுடன் மோதுண்டதிலேயே இவ் விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது ஆட்டோச் சாரதியும் இதில் பயணம் செய்த பௌத்த மதகுருவொருவரும் ஸ்தலத்தில் பலியாகியதுடன் வானில் பயணித்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

## புதுக்குடியிருப்பு பொலிஸாரால் 60 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது

### சந்தேகத்தின் பேரில் மூவர் கைது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் 60 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் 60 கிலோ கஞ்சாவை மீட்டதுடன் சந்தேகத்தின் பேரில் 3 நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இவர்கள் விரைவில் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (2-281)

## நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் கொண்டு சென்றவருக்கு 90 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் கொண்டு சென்ற ஒருவரையும் டிப்பர் வாகனத்தையும் கைது செய்த பொலிஸார் குறித்த வாகனத்தையும் சாரதியையும் கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு 90 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி உழவு இயந்திரத்தில் மணல் கொண்டு சென்ற ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த பெண்ணொருவரைக் கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த பெண்ணையும் சான்றுப் பொருளையும் கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இரண்டாயிரம் மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இரண்டாயிரம் மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த ஒருவரை கைது செய்த தருமபுரம் பொலிஸார் குறித்த குற்றவாளியையும் சான்றுப் பொருளையும் கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி பட்டா ரக வாகனத்தில் மணல் கொண்டு சென்றவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளி நொச்சி நகர்ப்பகுதியில் பட்டா ரக வாகனம் ஒன்றில் மணல் கொண்டு சென்ற ஒருவரை கைது செய்த பொலிஸார் குறித்த வாகனத்தையும் அதன் சாரதியையும் கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி உழவு இயந்திரத்தில் மணல் கொண்டு சென்றவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிய உழவு இயந்திரத்தினையும் அதன் சாரதியையும் கைது செய்த விசேட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கடந்த 14 ஆம் திகதி குறித்த உழவு இயந்திரத்தினையும் அதன் சாரதியையும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் 4 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்த நபரையும் சான்றுப் பொருளையும் கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு. கோவிந்தப்பிள்ளை வரதராஜமூர்த்தி அவர்களின்

# சேவை நயப்பு பாராட்டு விழா





### சின்மய மிஷன் சுவாமிகளின் ஆசிச்செய்தி

உலகில் உள்ள பணிகள் யாவற்றிலும் மகத்தான பணியாக போற்றப்படுவது ஆசிரியப்பணியாகும். அத்தகைய பணியில் தம்மை முற்றுமுழுதாக இணைத்துக் கொண்டுள்ள திரு. கோவிந்தபிள்ளை வரதராஜமூர்த்தி ஐயா அவர்கள் இப்பணியில் கடந்த 32 வருடங்களாகத் தம்மை அர்ப்பணித்திருந்து 16.06.2017 வெள்ளிக்கிழமைஓய்வுபெற்றுள்ளார். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் சாவகச்சேரியை வாழ்விடமாகவும் கொண்ட வரதராஜமூர்த்தி ஐயா அவர்கள் தனது சேவையின் ஆரம்ப நிலையமான அவிசாவளைப் பிரதேசத்தில் 5 வருடங்கள் பணியாற்றியுள்ளார். என்றும் மறக்க முடியாத யுத்த அனர்த்தங்களின் பின்னர் ஒரு வருட காலம் முல்லைத்தீவில் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நொருக்கப்பட்ட இதயங்களுடன் கலந்து அவர்களை வழிப்படுத்தும் பணியையும் ஏற்றுள்ளார். கடந்த 4 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி தனது மகத்தான பணியை நிறைவு செய்கின்றார். இத் தகைய அனுபவசாலிகளின் ஆளுமை மிக்க வழிநடத்தல்கள் எமது சமுதாயத்திற்கு என்றும் தேவையானதாகும். இதுவரை கல்விப்பணியில் ஈடுபட்டிருந்த ஐயா அவர்கள் இனி வரும் ஓய்வுக்காலங்களில் சமூகம் சார் பணிகளில் ஈடுபட்டு தனது ஆற்றலையும் அறிவையும் அனுபவத்தையும் சமூகத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும் என்பது எமது விருப்பமாகும். ஐயா அவர்களின் ஓய்வுக்கால வாழ்வு அமைதியும் சாந்தமும் நிறைந்ததாக அமைய ஆசி வேண்டி எல்லாம் வல்ல இறைவனையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிராத்திக்கின்றோம்.

**இறைபணியில்,**
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா.**

வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்.



### மறைக் கோட்ட முதல்வரின் ஆசிச் செய்தி

யாழ். கல்வி வலயத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக மிகச்சிறப்பான சேவையை ஆற்றி ஓய்வு பெறும் திரு.கோ.வரதராஜமூர்த்தி அவர்களுக்கு என் வாழ்த்துக்கள் உரித்தாகுக. திரு.கோ.வரதராஜமூர்த்தி அவர்கள் வடமராட்சி கிழக்கின் செம்பியன்பற்றில் பிறந்து கல்வி பயின்றவர். கடின உழைப்பினால் உயர்ந்தவர். இந்துவாக இருந்தாலும் செம்பியன்பற்றில் கோவில் கொண்ட புனித. பிலிப் நேரியாரில் அதிக பற்றுக்கொண்டவர். சகல மதங்களையும் மதிப்பவர். தன் கடமையை நேசிப்பவர், பிறரை மதிப்பவர், தனக்குத் துன்பம் நேரிட்டாலும் உண்மையை உரத்து உரைப்பவர். நேர்மைக்கு இலக்கணமானவர்.நேர்மையான சுபாவத்தால் தனது உயர்வுகளைக் கூட தியாகம் செய்தவர். அற்புதமான இச் சேவையாளரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன். அவர் குடும்பத்தை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

**அருட்பணி. R.X.நேசராஜா**
**யாழ். மறைக்கோட்ட முதல்வர்,**
**யாழ். மரியன்னை பேராலயம்.**

**பெயர்: கோவிந்தப்பிள்ளை வரதராஜமூர்த்தி**
B.A,Dip in Ed, SLEAS-2
பதவி: பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) யாழ்.கல்வி வலயம்
பிறப்பு : 17.06.1957
பிறப்பு இடம் : செம்பியன்பற்று (வடமராட்சி கிழக்கு)
திருமணம் : 26.08.1986 மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

**கல்வி**
ஆரம்ப பாடசாலை: யா/ செம்பியன்பற்று G.T.M.S - 1-8
இடை நிலைப்பாடசாலை: யா/ உடுத்துறை மகா வித்தியாலயம் 9-11
உயர் நிலைப் பாடசாலை: யா/செங்குந்தா இந்துக்கல்லூரி 12-13
யாழ். பல்கலைக்கழகம் -இந்து நாகரிக பட்டதாரி (B.A)

**சேவை விபரம்:**
ஆசிரிய பணி
கொ/ கொழும்பு அவிசாவளை C.C.T வித்தியாலயம் 26.12.1985 -1990
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம் 1990-1999

**கல்வி நிர்வாக சேவை**
பிரதிக் கல்விப்பணிப்பாளர் - தென்மராட்சி 1999-2011
பதில் வலயக்கல்விப் பணிப்பாளர் - முல்லைத்தீவு 2011.11-2012.11
பிரதிக் கல்விப்பணிப்பாளர் - யாழ்ப்பாணம் 2013-2017

**பிள்ளைகள் 5 பேர்**
மகள் - கண் தொழில் நுட்பவியலாளர், கண் வைத்தியசாலை, மருதானை
மகன் - கந்தானை
மகள் - கனடா
மகன் - யா/ இந்துக் கல்லூரி
மகள் - யா/வேம்படி மகளிர் கல்லூரி



### வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தினது பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி அகவை அறுபதில் ஓய்வு பெறும் திரு.கோ.வரதராஜமூர்த்தி அவர்களுக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகிறேன். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றினைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது கடின முயற்சியின் மூலம் உயர் கல்வி பெற்று யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகப் பட்டதாரியானார்.

1999 ஆம் ஆண்டில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு தென்மராட்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினார். சிறிது காலம் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய இவர் பின்னர் யாழ். வலயத்தில் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஏறத்தாழ 15 வருடங்கள் ஆசிரியப் பணி உள்ளடங்கலாக இவர் 32 வருடங்கள் கல்விப் பணியினை ஆற்றியுள்ளார். இவர் தனது சேவைக் காலத்தில் எவருடனும் முரண்படாது தனது கடமையினை சரிவர நிறைவேற்றியமை பாராட்டுதற்குரியதாகும். இவர் தனது சேவைக் காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**வடக்கு மாகாணம்.**

### கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றி தற்போது யாழ் வலயத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளராக தனது கடமைகளை செவ்வனே நிறை வேற்றி இளைப்பாறும் திரு.கோ.வரதராஜமூர்த்தி அவர் களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மற்றயவர்களுடன் முரண்படாது இணைந்து பணிபுரியும் உயரிய பண்பை தன்னகத்தே கொண்டிருந்த அவர் தன்னுடைய கருத்துக்களை தயக்கமின்றி சரியான தருணத்தில் நியாய பூர்வமாகவும் தர்க்க ரீதியாகவும் முன்வைக்கும் துணிச்சலுடையவராக விளங்கினார்.

கல்வி நிர்வாகம் தொடர்பான ஆழ்ந்த புலமைமையையும், பரந்துபட்ட அனுபவத்தையும் தனது சேவையின் போது நடைமுறைப்படுத்திக் காட்டினார். தன்னுடன் பணிபுரிவோரை ஆகர்ஷிக்கக் கூடிய ஆளுமையும் நற்பண்புகளும் அவரிடம் நிறைந்திருந்தன. அதிபர்களையும் ஆசிரியர்களையும் வழிப்படுத்துவதில் வெற்றிகண்டவர். அவர்களின் மனதில் இடம் பிடித்தவர்.

எனதுபணிக்கு பக்கத்துணையாகவும், விசுவாசமாகவும் இடித்துரைக்கும் பக்குவமும் கொண்ட அவர், கால நேரம் பாராது பணியாற்றியவர். ஆற்றல் மிகுந்த அவர் இளைப்பாறுவது மனதை நெருடினாலும் அவரது ஓய்வுக்காலம் குடும்பத்தாருடன் மகிழ்ச்சிகரமானதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ந.தெய்வேந்திரராஜா,**
**வலயக்கல்விப்பணிப்பாளர்.**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

### மெய்மையின் உத்தமன்




யாழ்ப்பாண கல்வி வலயத்தில் எல்லோர் மனங்களையும் கவர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) உயர்திரு. கோ. வரதராஜமூர்த்தி அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி தருவதில் மிக்க மகிழ்ச்சியடை கின்றேன். வடபுலத்தின் கல்வியை மூலதனமாகக் கொண்ட கல்வியாளர்களும், கல்வி நிர்வாகிகளும் செறிந்து வாழும் வடமராட்சி மண்ணில் பிறந்து தென் மராட்சி மத்தியில் மணம் முடித்து சிறந்த சேவையாற்றிய வர் மூர்த்தி சேர் அவர்கள். தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை தனது சொந்த ஊரான செம்பியன்பற்றிலும் உயர்தரக் கல்வியை செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் கற்று பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பை யாழ். பல்கலைக் கழகத்திலும் நிறைவு செய்த இவர் கல்விப் பணியில் ஆசிரியராக 14 வருடங்களும் கல்வி நிர்வாக சேவையில் 16 வருடங்களும் சேவையாற்றி நிறைந்த அனுபவத்தை கொண்டவர். இவர் மிக் எளிமையாக வாழ்ந்தவர். கிராமிய பண்பாடுகள், பழக்கவழக்கங்களை பேணியவர். எல்லோரிடமும் சகஜமாக, இனிமையாக பழகுபவர். உரிய நேரத்திற்கு வருகை தந்து தனது பணிகளை செவ்வனே நிறைவேற்றுவார்.

நிறுவனத்தின் தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு விசுவாசமிக்கவராக, கூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டு நிர்வாகப் பணிகளை திறம்பட நிறைவேற்றியுள்ளார். யாழ்ப்பாண கல்வி வலயத்தின் மிக நட்புடன் பழகும் நண்பனை சேவையின் நிமிர்த்தம் இழந்துள்ளோம். இவர் தன் ஓய்வுக் காலத்தில் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழவும் நோய் நொடியின்றி வாழவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகின்றோம்.

**அ.அகிலதாஸ்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்.**
**யாழ்ப்பாண கல்வி வலயம்.**

### தன்னிகரில்லா சேவயாளர்



கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் நிர்வாகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகத் தன்னிகரற்ற சேவையை வழங்கிய திரு.கோவிந்தப்பிள்ளை வரதராஜமூர்த்தி அவர்களின் சேவை நயப்புக்காக வாழ்த்துரை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக மகிழ்வடைகிறேன்.

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்றில் பிறந்து கல்வியுலகுக்கு ஈந்த முப்பத்திரண்டு வருடகாலக் கல்விப் பணியில் நான்கு வருடத் திற்கு மேலான காலப் பகுதியை எமது கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சிக்காக மூர்த்தி சேர் அர்ப்பணித்தமை நாம் பெற்ற பேறாகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையில் பட்டதாரியாக வெளியேறி கொழும்பு அவிசாவளை சி.சி.த.க. பாடசாலையில் ஆசிரியராக கல்விச் சேவையில் நுழைந்தவர்.யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றி பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை நிறைவு செய்தபின் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் இணைந்து உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் 2011 ஆம் ஆண்டில் மீள்கட்டுமானப் பிரதேசமாகிய முல்லைத்தீவுக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றமை அவரது சேவைக்குக் கிடைத்த பெரும் அங்கீகாரமாகும்.

நெருக்கடி மிகுந்த அக்காலப்பகுதியில் கண்ணியமான சேவையும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத பண்பும் எமக்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டாகும் எனில் அது மிகையன்று. தொடர்ந்து வட மாகாணத்தின் அதிக மாணவர் மற்றும் ஆளணி வளத்தைக்கொண்ட யாழ்ப்பாணம் கல்வி வலய நிர்வாகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதது. பண்புடன் பிரச்சினைகளைக் கேட்டறிந்து பணியாளர்களின் தாபன விடயங்களைப் பூர்த்தி செய்து ஆசிரியர்களின் பதவி உயர்வுகள், உள்ளீர்ப்புகள், சம்பள ஏற்றங்கள் போன்றவற்றைச் செவ்வனே நிறைவேற்றப்பட்டதுடன் தேங்கிக் கிடந்த பல தாபன வேலைகள் மூர்த்தி சேரின் முயற்சியால் செய்து முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். கூட்டங்களில் இரத்தினச் சுருக்கமாக, கூற வேண்டிய விடயங்களை எடுத்துரைக்கும் பண்பு எல்லோர்க்கும் முன்னுதாரணமாகும். எமது வலயத்தில் ஆற்றிய சேவையின் கனம் அவரது முழுமையான சேவையின் விளைதிறனை எடுத்தியம்பும். அவரது அர்ப்பணிப்புமிக்க சேவைக்காக அதிபர்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவிப்பதுடன் தான் எடுத்த பணியைச் செவ்வனே நிறைவு செய்து தனது அகவை அறுபதில் ஓய்வுபெறும் திரு.கோ.வரதராஜமூர்த்தி சேர் தனது குடும்பத்தாருடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று நலமாக நீடூழி வாழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகின்றேன்.

**ச.வேலழகன்,**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**
(விழா ஏற்பாட்டுக்குழு சார்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக


# வடமராட்சியில் பூரண ஹர்த்தால்

## சட்டத்தரணிகள் கடமைகளைப் புறக்கணித்தனர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் காரணமாக வடமராட்சிப் பகுதி முற்றாக முடங்கியது.

போக்குவரத்து சேவைகள் முற்றாக முடங்கியிருந்தன. தனியார், இலங்கை போக்குவரத்து சபையினர் இதற்கு முழுமையாக ஆதரவினை வழங்கினர். சந்தைகள் மூடப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள் எவையும் திறக்கப்படவில்லை. வங்கிகள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தரவில்லை. அரச அலுவலகங்கள் திறக்கப்பட்டிருந்தும் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாக இருந்தது. முன்னாள் நீதியரசர் என்ற வகையில் அவருக்கு ஆதரவாக பருத்தித்துறை நீதிமன்ற சட்டத்தரணிகளும் புறக்கணிப்பு செய்தனர். (இ-60)




## உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் காவல்துறையில் கடமையாற்றுகின்றனர்

உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் காவல்துறைத் திணைக்களத்தில் கடமையாற்றி வருவதாக இலங்கை மோட்டார் சைக்கிள் பேரவை தெரிவித்துள்ளது.

கடமையில் ஈடுபட்டிருக்கும் போது அதிகளவில் கோபம் கொள்ளும் காவல் துறை உத்தியோகத்தர்களை அடிக்கடி உளவியல் ரீதி யான பரிசோதனைக்கு உட் படுத்தப்பட வேண்டு மென கோரியுள்ளது.

சில காவல்துறை உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளினால் ஒட்டுமொத்த காவல்துறையினருக்கே களங்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, காவல் துறையினருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக காவல்துறைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)



## ராஜித, சம்பிக்க மீது கோத்தபாய சீற்றம்

(கொழும்பு)

ராஜித, சம்பிக்க நாட்டுக்குப் பணியாற்றத் தெரிந்தவர்கள் அல்லர். அவர்கள் பொய்க்காரர்கள் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சீற்றத்துடன் தெரிவித்தார்.

பாரிய நிதி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் பிற்பகல் ஆஜராகியதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

ரக்னா லங்கா நிறுவனத்துக்கு தனக்கு வேண்டியவர்களை நியமித்துத் தருமாறு எனக்கு கடிதம் அனுப்பியவர்கள் தான் இந்த அமைச்சர்களான ராஜிதவும், சம்பிக்கவும்.

இப்போது எங்கள் மீது குற்றம்சாட்டு கின்றனர். அவர்கள் அனுப்பிய கடிதங்கள் இன்னும் என்னிடம் இருக்கின்றன. பொய் கூறித் திரியாமல், நாட்டுக்காக வேலை செய்து காட்டுமாறு நான் அவர்க ளிடம் கேட்டுக் கொள்கின்றேன். அவர்களைப் பற்றி சிறுபராயம் முதல் எனக்கு நன்கு தெரியும்.

நான் எம்.பியோ, அமைச்சரோ அல்ல. பேய் விரண்டோடும் அளவுக்கு பொய்களைக் கூறாமல் அவர்களது வேலையை ஒழுங்காகச் செய்யுமாறு நான் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் எனவும் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)

## நல்லிணக்கத்தை சீர்குலைக்க பொதுபல சேனா தீவிர முயற்சி

### பிரஜைகள் அமைப்பு குற்றச்சாட்டு

நாட்டில் இனங்களுக் கிடையில் நல்லிணக்கத் தைச் சீர்குலைக்கும் வகையில் பொதுபல சேனா அமைப்பு செயற்பட்டு வருவதாக பிரஜைகள் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

அவ்வமைப்பின் ஏற்பாட்டாளர் காமினி வியங்கொட இதனைத் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் பொலிஸாருக்கும் நீதிமன்றத்துக்கும் அகப்படாமல் மறைந்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஞானசார தேரரின் நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புச் சொல்ல வேண்டும் எனவும், இவ்வளவு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவருக்கு சட்டத்தில் பாதுகாப்பு கிடைப்பதாயின் அரசாங்கத்திலுள்ள சில முக்கிய நபர்கள் இதன் பின்னால் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மோட்டார் சைக்கிள் விபத்து; 6 வயதுச் சிறுமி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 6 வயதுச் சிறுமியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, ஆலய முன் வீதியில் தாயும் மகளும் நடந்து சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் சிறுமியை மோதியதனால் சிறுமி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-107)

## மஹோற்சவம்

வட்டுக்கோட்டை- தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 29.06.2017 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 30.06.2017 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரம்

தேசிய ரீதியில் இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு "அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்திடுவீர்" எனும் தொனிப் பொருளில் ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. அந்த வகையில் பாடசாலை மாணவர்களுக்கு இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு கொடிவாரமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. (இ-5-105)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட போது 10பேர் பொலிஸாரால் கைது

வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட பத்துப் பேரை தாம் கைது செய்துள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

15.6.2017 அன்று அப் பகுதியில் சூதாட்டத்தில் சிலர் ஈடுபடுவதாக வல்வெட்டித் துறைப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அதே பகுதியைச் சேர்ந்த பத்துப் பேரைக் கைது செய்து பொலிஸார் பிணையில் விடுவித்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (இ-60)

## முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து சிரேஷ்ட பிரஜைகளையும் தவறாது சமூக மளிக்குமாறு செயலாளர் ந. கனகலிங்கம் அறிவித்துள்ளார். (இ-3)

## அகற்றப்படாத குப்பைகள் பிரதேச மக்கள் அசௌகரியம்

(கோப்பாய்)

நெக்கிழ மேற்கு, நெக்கிழ கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் மாநகர சபையால் அகற்றப்பட்டு வந்த குப்பைகள் உரிய காலத்தில் அகற்றப்படாமையால் பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-108)

## பரிசளிப்பு விழா இன்று

யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் சின்னத்தம்பி தர்மரத்தினம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக நீர்வேலி நலன்புரிச் சங்க முன்னாள் தலைவருமான கோபால சிங்கம் ஜீவா, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நாகலிங்கம் சிவநேசன், பழைய மாணவியும் கொழும்புத் தேசிய கண் வைத்தியசாலையின் கணக்காளருமான செல்வி பிரதீபா தர்மரத்தினம், கௌரவ விருந்தினராக நவரத்தினம் சிவனேஸ்வரன் பழைய மாணவர் ... ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## 50 ஆவது பஜனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிறுவனத்தின் பொன் விழாவையொட்டி இடம்பெறும் தொடர் பஜனையின் 50 ஆவது பஜனை நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியிலிருந்து இரவு 7 மணி வரை இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம் பெறும். (இ-3)

## கல்விக்கான நிதிவழங்கலும் யோகா பயிற்சியும் இன்று

கிறீன்பீல்ட் சனசமூக நிலையம் நடத்தும் யோகா பயிற்சியும் கல்விக்கான நிதி வழங்கல் நிகழ்வும் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். குருசோ வீதியிலுள்ள கிறீன்பீல்ட் மண்டபத்தில் பேராசிரியர் சு. மோகனதாஸ் தலைமையில் இடம்பெறும். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜெயா மருத்துவ செலவு ரூ.6 கோடி அம்மா அணி அப்பலோவுக்கு வழங்கும்

(சென்னை)

ஜெயலலிதா வைத்திய சாலை செலவுக்கு ரூ.6 கோடிக்கான காசோலை, அ.தி.மு.க. அம்மா அணி சார்பில் அப்பலோ வைத்திய சாலை நிர்வாகத்திடம் வழுங்கப்படுகிறது.

முதலமைச்சர் ஜெயலலிதா உடல்நலக்குறைவு காரணமாக கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு 2 மாதங்களுக்கும் மேலாக சிகிச்சை அளிக்கப்பட்டது. வெளிநாட்டு மருத்துவர்களும் வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை அளித்தனர். எனினும் சிகிச்சை பலன் அளிக்காமல் கடந்த ஆண்டு டிசெம்பர் 5 ஆம் திகதி ஜெயலலிதா உயிரிழந்தார்.

அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட வகையில் ரூ.6 கோடி மருத்துவ செலவு ஆனது. ஜெயலலிதா முதலமைச்சராக இருந்ததால், அவரது மருத்துவ செலவை அரசே ஏற்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் இந்த மருத்துவ செலவு தற்போது அ.தி.மு.க. (அம்மா)




கட்சி சார்பிலேயே வழங்கப்பட உள்ளது.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று முனதினம் நடந்த அவசர ஆலோசனை கூட்டத்தில் ரூ.6 கோடிக்கான காசோலை, சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கரிடம் வழங்கப்பட்டது. அவர் இந்த காசோலையை அப்பலோ வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்வுள்ளார். (இ-3-8)

# தரம் 6 மாணவர்களுக்குரிய கணித ஒலிம்பியாட் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தரம் 6 மாணவர்களுக்குரிய மாகாண மட்ட கணித ஒலிம்பியாட் பரீட்சை நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் பி.ப 12.30 மணிக்கு நடைபெறும்.

இப்பரீட்சைக்கு தோற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் அன்றைய தினம் மு.ப 11 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் பொறுப்பாசிரியர் கு.உமாகரனிடம் தங்களுக்குரிய சுட்டிலக்கத்தினை பெற்று பரீட்சைக்கு தோற்றுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# இரு நூல்களின் அறிமுகவிழா.

வடலி பதிப்பகத்தின் எஸ்போஸின் படைப்புக்கள் அம்பரய (மொழி பெயர்ப்பு நூல்) ஆகிய இருநூல்களின் அறிமுகவிழா நாளை ஞாயிறு யிற்றுக்கிழமை பிற்பகல் மாலை 3மணியளவில் 128, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியிலுள்ள கலைத்தூது அழகியல் கல்லூரி மண்டபத்தில் வேலணையூர்தாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. உரைகளை த.அகிலன், தா.விஷ்ணு ,ந.சத்தியபாலன் கருணாகரன் மற்றும் தர்சனனந்தன் ஆகியோர் நிகழ்த்துவர். (இ-3)

# எம்.எல்.ஏக்கள் பணம் வாங்கியது உறுதி ஆதாரத்துடன் மு.க.ஸ்டாலின் பேட்டி



ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்களுக்கு பல கோடி ரூபாய் கைமாறியது உறுதியாகி விட்டது என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்த மு.க.ஸ்டாலின் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.

கடந்த பெப்ரவரி மாதம் அ.தி.மு.க. ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்காக அ.தி.மு.க. எம்.எல். ஏக்களுக்கு பல கோடி ரூபாய் கைமாறியதாக செய்திகள் வெளியாகின. இதற்கான ஆதாரம்ஒரு ஆங்கில தொலைக்காட்சியில் வெளியிடப்பட்டது.

கடந்த 2 நாட்களாக இந்த பிரச்சினை குறித்து அவையில் விவாதிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். ஆனால் சபாநாயகர் இது வரைஅனுமதிவழங்கவில்லை.

நேற்றைய தினம் நாங்கள் வெளிநடப்பு செய்ததன் பின் சபாநாயகர் ஆதாரம் இல்லாமல் எந்த பொருள் பற்றியும் சபையில் விவாதிக்க முடியாது என்று கூறி இருக்கிறார். எனவே அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களுக்கு பணம் கைமாறியதற்கான ஆதாரங்கள் அடங்கிய சி.டியை சபாநாயகரிடம் கொடுப்பதற்காக கொண்டு வந்துள்ளோம். (இ-3-8)

# சோமாலிய தாக்குதலின் தீவிரவாதிகள் ஐவரையும் சுட்டுக் கொன்ற பொலிஸார்

சோமாலியாவில் உள்ள உணவகம் மீது தாக்குதல் நடத்திய 5 தீவிரவாதிகளும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தனர்.

சோமாலிய தலைநகர் மொகாடிசுவில் உள்ள பிரபல உணவு விடுதியின் வாசலில் நின்ற கார்க்குண்டு மூலம் நேற்று நள்ளிரவில் தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். தாக்குதலை தொடர்ந்து இராணுவ உடையுடன் உணவு விடுதிக்குள் நுழைந்த தீவிரவாதிகள் அங்கிருந் தவர்களை நோக்கி சரமா ரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். உணவு விடுதியில் மக்கள் பலர் பணயக் கைதி களாக பிடித்து வைக்கப்பட்டனர். தாக்குதலில் 9 பேர் பலியானதாகவும் பலர் காயமடைந்திருப்பதாகவும் தகவல் வெளியானது.

இத்தயடுத்து பொலிஸா சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, உணவகத்தை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலில் 5 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

தாக்குதலின் இறுதியில் உயிரிழப்பு 31 ஆக அதிகரித்திருப்பதாகவும், சுமார் 40 பேர் காயமடைந்திருப்பதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியாவில் புதிய அரசு பதவியேற்று, புதிய இராணுவ அமைப்புகளை ஏற்படுத்தி இருந்த நிலையில், அல் ஷபாப் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.(இ-3-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1105

Search for people, places and things  Nagendram  Home

உமா




கலாவதி




நிரோஜன்




பாமினி




சிஜிந்தன்




கமலன்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச நிகழ்ச்சி நிரலில் இலங்.தமிழரசுக்கட்சி

## சுரேஷ் காட்டம்



தமிழ் மக்களுக்குரிய கடமைகளைச்செய்து கொண் டிருக்கும் ஒருவரை கடமை களில் இருந்து விலக்கி வட கிழக்கு இணைப்பைக் கைவிட்டு சமஷ்டி அரசியல் முறை என்பதைக் கைவிட்டு இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் செயற்பட் டுக்கொண்டு இருக்கக் கூடிய தமிழரசுக் கட்சியானது சுமந் திரன், மாவை சேனாதிராஜா போன்றோரை முன்னிலைப் படுத்தியும் தமிழரசுக் கட்சி யின் மாகாண சபை உறுப் பினர்களையும் அரச சார்பான இரண்டு சிங்கள மற்றும் மூன்று முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்களை உள் ளடக்கியதாக ஒரு நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவந்துள்ளமை யானது வெறுமனே தமிழ் ரசுக் கட்சி மாத்திரமன்றி ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்துதான் இந் நம்பிக் கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முயற்சிக்கி றார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. இத்தகைய செயற்பாடானது தமிழ் மக் களை மிகமிக மேசமாகத் தாக்குகின்ற ஒரு செயற்பாடா கும் என ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சியின் தலைவரும் முன் னாள் பாராளுமன்ற உறுப் பினருமான சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத் தில் நேற்று முன்தினம் நடை பெற்ற பத்திரிகையாளர் சந் திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள் ளார். வடக்கு மாகாணத்திற்கு ஊழல் அற்ற நல்லாட்சியை வழங்கவே முதலமைச்சர் அமைச்சர்களை பதவி நீக்கி யிருந்தார். இவ்வாறு அவர் பதவி நீக்கியது மாகாண சபை உறுப்பினர்களின் கோரிக் கைக்கு அமைவாக நிறுவப் பட்ட ஆணைக்குழுவின் அறிக்கைகளின் அடிப்படை யிலேயே அவர் அம் முடிவை எடுத்திருந்தார். இது அவர்க ளது உரைகளின் ஊடாகவே வெளிப்பட்டு நிற்கின்றது. இவ்வாறான நிலையில் முதலமைச்சர் என்பவர் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்திற்கும் மேலான வாக்குகளைப்பெற்று மக்களால் தெரிவு செய்யப் பட்டவர். அவ்வாறு அவர் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்டமையானது வெறுமனே தமிழரசுக் கட்சி யினுடைய விருப்பின் மாத்தி ரமன்றி அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக் கக் கூடிய நான்கு கட்சிகளி னதும் சம்மதத்தினுடனே யாகும். அத்துடன் அவர் வெல் வதற்குரிய அனைத்துக் கார ணங்களும் இந் நான்கு கட்சிகளையும் சாரும்.

எனவே இவ் இறுதி நேரத் திலாவது வடக்கு முதல மைச்சருக்கு எதிராக செயற் பட்ட தமிழரசுக் கட்சி தான் விட்ட தவறுகளை திருத்திக் கொள்ளவேண்டும். இதற்கு சம்பந்தன் இதனைக் கவ னத்தில் எடுத்து சரியான நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். இல்லாவிடின் எல்லா ப்பிரச்சினைகளுக் கும் சம்பந்தன், சுமந் திரன், மாவை சேனாதிராசா போன் றோரே. காரணம் என்ற நிலை தமிழ் மக்களுக்கு ஏற்படும் இதனை அவர்கள் ஏற்படுத் தக்கூடாது என்பதுடன் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியுமா? என்ற ஒரு சிந்தனை யையும் எமக் தேற் றுவிப்பதாகவும் உள் என்பதைக் கூறிக்கொள் கின்றேன் என சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது உரையில் குறிப்பிட் டுள்ளார். (செ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 4 இல்
தகைமை/தொழில்: A/L/சவுதி
தொ.இ: B/7445

பிறப்பு: 1987 RC
நட்சத்திரம்: சுவாதி
தகைமை/தொழில்: பொறியியலாளர்
தொ.இ: B/7447

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 47செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc/அரச தொழில்
தொ.இ: B/7450

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:பொறியியளாளர்
தொ.இ: B/7451

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 31 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்
தொ.இ: G/6510

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 10
உயரம்: 4'9"
தகைமை/தொழில்: A/L/வங்கியாளர்
தொ.இ: G/6513

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 20 செவ் 8இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/6517

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 32 செவ் இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்: BA, MA/ ஆசிரியர்
தொ.இ: G/6518

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# இம்மானுவேல் தெய்வீக சுகமளிக்கும் ஜெப ஆலயம்



கஷ்டதுன்பங்கள், பில்லி சூனியங்கள் சகலதும் தரிசன வல்லமையினால் நீக்கப்படும்
17.06.2017,18.06.2017 ஆகிய இரு நாட்களும் சுகமளிக்கும் ஜெப ஆராதனை (08.07.2017 ஆம் திகதி வரை சந்திக்கலாம்)
இடம் : தம்புவத்தை, ஏழாலை மேற்கு.
(9452)
போதகர் சகோ - டேவிட் (லண்டன்) தொடர்பு கொள்ளும் அழைப்பு: கிரிஸ்ரின் (லண்டன் 0769839038, 0778520121


# இராசி பலன்

17.06.2017
(ஆனி 03, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
அட்டமி முன்னிரவு 11.58 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 2.48 மணிவரை
சுபநேரம் 2.53-4.23 மணிவரை
இராகுகாலம் 8.53-10.23 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | சுக் | | செவ் புத சூரி |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மகம், பூரம்<br>காலை 9 மணிக்கு<br>மீன-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், சயன சுகக் குறைவுகள் உருவாக லாம்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உறவினர் வருகை யுண்டு.

**மிதுனம்:** பேச்சைக் குறைத்து செய லில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப் புண்டு.

**கடகம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச் சியும் அதிகரிக்கும், சுணங் கிய காரியங்களில் முன்னேற் றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம், திருடர் பய முண்டு.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பயணங்கள் செல்லப்போட்ட திட்டங்கள் கைகூடும், காரிய அனுகூல முண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன் னேற்றம் உருவாகும்.

**விருச்சிகம்:** பிள்ளைகள் வழியில் பெரு மைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொலை பேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரி யும்.

**தனுசு:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டு வீர்கள், பெற்றோர் மீது பிரி யம் கூடும், அரசியல் செல் வாக்கு மேலோங்கும் நாள்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், இளைய சகோ தர வழியில் இனிய செய்தி யொன்று வந்து சேரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**கும்பம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்பட லாம், பணப்புழக்கம் அதிகரிக் கும் நாள்.

**மீனம்:** போசன சுகமுண்டு, நண்பர் களின் சந்திப்புகள் இடம் பெறலாம், ஆழ்ந்த சிந்தனை யுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியில் புதிதாக உருவாகும் நாடு ஐந்து இலட்சம் பேர் குடியேற விண்ணப்பம்

விண்வெளியில் உருவாகும் புதிய நாட்டில் குடியேற 5 இலட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் 2 இலட்சம் பேர் தேர்ந்தெடுக்கப் பட்டு புதிதாக உருவாகும் விண்வெளி நாட்டில் குடியேற அனுமதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவைச் சேர்ந்த கணனி விஞ்ஞானியும், ஏரோஸ்பேஷ் இன்டர்நஷனல் ஆய்வு மைய தலைவருமான டாக்டர் இகோர் அசுர்பெய்லி விண்வெளியில் ஒரு நாட்டை உருவாக்க திட்டமிட்டுள்ளார். அதற்கு 'அஸ்கார்சியா' என பெயரிடப் பட்டுள்ளார்.

விண்வெளியில் உருவாகும் புதிய நாடு குறித்த அறிவிப்பை கடந்த ஆண்டு ஒக்டோபர் 12 ஆம் திகதி பாரிசில் அறிவித்தார். அதில் குடியேற விரும்புபவர்கள் விண்ணப்பம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து சர்வதேச அளவில் 200 நாடுகளை சேர்ந்த 5 இலட்சம் பேர் விண்ணப்பம் அறிவிப்பு வெளியிட்ட 20 நாளில் செய்திருந்தனர்.

அவர்களில் 2 இலட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு புதிதாக உருவாகும் விண்வெளி நாட்டில் குடியேற அனுமதி சான்றிதழும் வழங்கப் பட்டுள்ளது.

மேலும் விண்வெளி நாடு உருவாக்க கட்டுமான பணிக்கான அடிக்கல் நாட்டு விழா வருகிற செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. அதற்கான அடிக்கல் அகார்சியா-1 என்ற மைக்ரோ செயற்கை கோள் மூலம் வருகிற செப்டெம்பரில் அனுப்பப்படவுள்ளது. அது ஒரு ரொட்டி போன்ற அமைப்பில் 20 செ.மீ. நீளமும். 2.3 கிலோ எடையும் இருக்கும்.

'விண்வெளி நாட்டில் மக்கள் குடியேறும் முதல் படியாக அஸ்கார்சியா-1 விண்கலம் செயற்படும்' என டாக்டர் அசுர்பெய்லி தெரிவித்துள்ளார். (இ-3-8)

## கேள்வி அறிவித்தல்

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) 2017 (கட்டம்-1)

### பருத்தித்துறை பிரதேச சபை,புலோலி

01. தலைவர், பெறுகைக்குழு, பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி, வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. எனினும் பொது நிதிச்சுற்றறிக்கை இல. 04/2016(1) இற்கமைவாக இவ்விலை மனு கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு வழங்குவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்,அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி. (தொலைபேசி, தொலைநகல் : 021-2263276 மின்னஞ்சல் (pointpedrops@gmail.com) இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணிமுதல் பி.ப.14.00 மணிவரை, 10.07.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணத்தை ஆங்கில மொழியில் செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி எனும் இடத்திலிருந்து 19.06.2017 ஆம் திகதி தொடக்கம் 10.07.2017 ஆம் வரை காலை 9.00 மணிக்கும் பி.ப. 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000/-செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி எனும் முகவரிக்கு 10.07.2017 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரையும் குறிப்பிட்டு, மூலப்பிரதி, இணைப்பிரதி என்பனவற்றை தனித்தனியாக இரு கடித உறையிலிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது– 27.08.2017) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி என் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/41(11)/2/7/P SDG/2017-2 | பாலாவித் தெரு | 1.739 | 2மாதம் | C9 | 17500.00 | 24.09.2017 |
| NP/14/41(11)/2/7/P SDG/2017-3 | மாதாகோவில் வீதி | 1.2 | 2மாதம் | C9 | 12200.00 | 24.09.2017 |
| NP/14/41(11)/2/7/P SDG/2017-4 | பொதுமண்டப வீதி | 0.26 | 2மாதம் | C9 | 2700.00 | 24.09.2017 |
| NP/14/41(11)/2/7/P SDG/2017-5 | பூமகள் பச்சந்தி வீதி | 1.739 | 2மாதம் | C9 | 17500.00 | 24.09.2017 |
| NP/14/41(11)/2/7/P SDG/2017-6 | சாளம்பை வீதி | 0.868 | 2மாதம் | C9 | 8700.00 | 24.09.2017 |
| NP/14/41(11)/2/7/P SDG/2017-7 | பளவத்தை வீதி | 1.739 | 2மாதம் | C9 | 17500.00 | 24.09.2017 |
| NP/14/41(11)/2/7/P SDG/2017-8 | கேவில் வன்னாங்குளம் வீதி | 1.739 | 2மாதம் | C9 | 17500.00 | 24.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-9 | கூவில் வீதி | 1.2 | 2மாதம் | C9 | 12200.00 | 24.09.2017 |
| NP/14/41(11)/2/7/P SDG/2017-10 | இன்புலன் வீதி | 0.695 | 2மாதம் | C9 | 7000.00 | 24.09.2017 |
| NP/14/41(11)/2/7/P SDG/2017-11 | தேவரயாளி கன்னகை அம்மன் வீதி | 0.869 | 2மாதம் | C9 | 8700.00 | 24.09.2017 |


10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 03.07.2017 ஆம் திகதி 14.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**பருத்தித்துறை பிரதேச சபை,புலோலி,**
**வடக்குமாகாணம்.**

(C-8815) 17.06.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியில் எக்ஸ்ரே டெலஸ்கோப்



(பீஜிங்)

பூமிக்கு மேல் 500 கி.மீ. தூரத்தில் விண்வெளியில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் அறிய அதிநவீன எக்ஸ்ரே டெலஸ்கோப்பை சீனா நிறுவியுள்ளது.

விண்வெளி ஆராய்ச்சியில் சீனா முன்னேறி வருகிறது. அமெரிக்காவுக்கு போட்டியாக விண்வெளியில் தனியாக ஆய்வகம் அமைத்து வருகிறது. சந்திரனுக்கு ஆள் அனுப்ப திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில் தற் போது விண்வெளியில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் அறிய அதிநவீன எக்ஸ்ரே டெலஸ்கோப்பை நிறுவியுள்ளது.

2.5 தொன் எடையுள்ள இந்த டெலஸ்கோப் மார்ச்-4பி ரொக்கெட் மூலம் நேற்று விண்ணுக்கு அனுப்பப்பட்டது. வடமேற்கு சீனாவில் கோபி பாலைவனத்திலுள்ள ஜியூகுயான் செயற்கை கோள் மையத்தில் இருந்து ஏவப்பட்டது.

எக்ஸ்ரே டெலஸ் கோப்பை பூமிக்கு மேல் 550 கி.மீ. தூரத்தில் மார்ச்-4பி ரொக்கெட் தூக்கி சென்று நிலை நிறுத்தியது. அதன் மூலம் வானத்தில் ஏற்படும் கருந்துளைகள், கடுமையான காந்த வயல்கள் மற்றும் வெடித்து சிதறும் காமாகதிர்களை விஞ்ஞானிகள் கண்டறிய முடியும். (இ-3-8)

# சாராயம் விற்பனை; மக்கள் கடும் விசனம்

(கரணவாய்)

முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறையில் சாராய விற்பனை நிலையம் திறக்கப்பட்டமை பொது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-60)

# கணித விநாடிவினா போட்டி பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் இன்று சனிக்கிழமை நடத்தப்படவிருந்த வலய மட்ட கணித விநாடி வினாப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# ‘நீதிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம்; நீதியின் குரலை நீக்குவதற்கு நீங்கள் யார்?’

## கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு முன்பாக மக்கள், இளைஞர்கள் திரண்டு மாபெரும் ஆர்ப்பாட்டம்





வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் முதலமைச்சருக்கு தங்களின் ஆதரவை தெரிவித்தும் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக பொது மக்கள் மற்றும் இளைஞர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்னாள் ஒன்றுதிரண்ட பொதுமக்கள் முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்தும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டத்தை நேற்றுக் காலை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் “ஊழலுக்கு தண்டனை வழங்கு, நீதியை ஆள விடு. மக்களுக்கான ஆளுநரை சந்திக்க மறுத்தவர்கள் பதவிக்காக ஆளுநரின் காலில் ஊழலுக்குத் துணை நின்றால் தான் பதவியில் நீடிக்கலாமா? தமிழரசுக் கட்சியே முதல்வரும் ஊழலுக்கு உடந்தையாக வேண்டுமா? முன்னுதாரணமான முதலமைச்சரின் செயலுக்கு தடையா? நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உடன் இரத்துச் செய். எங்கள் முதல்வர் எங்களுக்கு வேண்டும், பதவிக்காக ஆளுநரிடம் சரணடைந்ததா தமிழரசுக் கட்சி? நீதிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நீதியின் குரலை நீக்குவதற்கு நீங்கள் யார்? குற்றவாளிகள் நீதிமானை தண்டிப்பதா? பதவி ஆசையே நம்பிக்கையில்லாப் பிரேரணை. ஊழலை மறைக்க எதிரியுடன் கூட்டா? தமிழரசுக்கட்சியே! நீ இலங்கை அரசின் கைக் கூலியா? தமிழினத்து துரோகிகளே! எமது வாக்கினால் வந்த தலைக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை வழங்க நீங்கள் யார்? எம்தலைவனை காலில் விழுந்து அழைத்து வந்து காலை வாரிவிடவா பார்க்கின்றீர்கள்?” ஆகிய கோசங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

அநீதிக்கு எதிரான மக்கள் அமைப்பினர் குறித்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர். குறித்த போராட்டத்தில் சிவில் அமைப்புக்கள், ஈ.பி. ஆர்.எல்.எவ் ரெலோ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட பலர் இணைந்தனர். (2-15-312)




# ‘எங்கள் தலைவர் விக்னேஸ்வரனே!’ முதல்வர் எடுத்த முடிவை மாற்ற வேண்டாம்

## வவுனியாவில் பொது அமைப்புக்கள் போராட்டம்




(குருமன்காடு)

வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவு தெரிவித்து வவுனியா மத்திய பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டவர்கள் "ஊழல்வாதிகளைக் கைது செய்து ஊழலைத் தட்டி க்கேட்டதற்கு தண்டனையா?, மக்கள் புரட்சி வெடிக் கட்டும். எங்கள் முதல்வர் விக்னேஸ் வரன் ஐயா, முதல்வரே எடுத்த முடிவை மாற்ற வேண்டாம், வாக்கிற்கு நாம், எம்மை சுரண்ட நீங்களா? எங்கள் தலைவர் விக்னேஸ்வரனே" போன்ற பல்வேறு வாசகங் களை ஏந்திய பதாகைகளை யும் கோசங்களையும் எழுப் பிய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான செந்தில்நாதன் மயூரன், ம. தியாகராசா, இந்திரராசா, ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா மாவட்ட பொது அமைப்பின் பிரதிநிதிகள், வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

### உருத்திரபுரீச்சர ஆலய வருடாந்த திருவிழா

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரநாயகி உடனுறை உருத்திரபுரீச்சர ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளது.

சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கைத்திருநாட்டின் வடக்கே வரலாற்றுப் பெருமை வாய்ந்த சோழ மன்னர் காலத்திற்கு முற்பட்ட ஏழு ஈச்சரங்களிலொன்றான உருத்திரபுரம் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் மறுநாள் 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து 30.06.2017,01.07.2017 ஆகிய தினங்களில் முறையே தீர்த்தம், பூங்காவனத் திருவிழாவுடன் 12 நாட்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது. (2-254)

# முதலமைச்சருக்கு எதிரான பிரேரணை முறையற்ற செயல்; கண்டிக்கின்றோம்

## வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு

(குருமன்காடு)

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கண்டித்தும் முதலமைச்சரின் ஊழலுக்கு எதிரான செயற்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்தும் வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.



நீதிமன்றத்திற்கு செல்லாது தமது பணிப் புறக்கணிப்பை வெளிப்படுத்தியிருந்தனர். இது தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணி கங்காதரன் கருத்து தெரிவிக்கையில்,

... பிழை செய்தார்களா, இல்லையா? என்பது விசாரணை செய்து கண்டுபிடிக்க வேண்டும். அதுபற்றி நாம் எதுவும் கூற முடியாது. ஆனால் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ... சட்டத்தரணிகள் ஆகிய நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதுடன், அதனை தமிழரசுக் கட்சியினர் மீளப்பெற வேண்டும் என்பதை வலியு... கைகளை புறக்கணித்துள்ளோம் ...

# கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் நடத்தும் 15 ஆவது திருக்குறள் மாநாடு

## இரண்டாம் நாள் நிகழ்வு நாளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம் நடத்தும் 15 ஆவது திருக்குறள் மாநாடு 2017 இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

இதில் இரண்டாம் நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திருவள்ளுவர் விழாவும் பரிசில் வழங்கல் நன்மதிப்பு நிகழ்வும் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் தமிழ்ச்சங்க மேனாள் தலைவர் கலையரசு கனகமகேந்திரா தலைமையில் நடைபெறும். நிகழ்வுகளாக நினைவுரை, ஊரகஆடல், தமிழிசைப் பாடல், நாட்டார்பாடல், மாணவர் உரைகள் என்பன நடைபெறும் (2)

# முறிப்புக்குளத்தில் சட்டவிரோத மண்ணகழ்வு; தாவரங்கள் அழிவடையும் நிலையிலுள்ளன

## பிரதேச மக்கள் கவலை

(மல்லாவி)

கிளிநொச்சி முறிப்பு குளத்தில் திட்டமிடப்படாத வகையில் பாரிய மண் அகழ்வு இடம்பெற்றுள்ளது.

குறித்த குளத்திலிருந்து சட்டவிரோதமாக மண்ண... யால், அக்குளத்தில் உள்ள ... நிலையில் உள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



பெரிய மரங்களை அண்டிய பகுதியில் மிக மோசமாக மண் அகழப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் மண்ணகழ்வினை தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி.
– பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஈழத் தமிழனாகப் பிறந்ததன் பெரும்பேறு கண்டுற்றேன்

“...இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்பார் திருநாவுக்கரசர்.

மனிதப் பிறவி எடுத்ததன் பேற்றை இயம்புவதுதான் அவரின் நோக்கம். நம் நோக்கமும் அதுவாயினும் அவர் குறிப்பிடும் பேறும் நாம் குறிப்பிடும் பெரும் பேறும் வேறுபட்டவை. அவர் இறைதாளைக் காண்பது பேறு என்பார்.

நான் எங்கள் தமிழினத்தின் உணர்வெழுச்சி காண்பதே பேறு என்பேன்.

ஆம், வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழரசுக் கட்சி கொண்டு வந்தபோது, அது கண்டு எம் தமிழினம் பதறியடித்ததை; எம் இளைஞர்கள் வீறுகொண்டெழுந்ததை கண்ணுற்ற போது இதுவே ஈழத் தமிழனாகப் பிறந்ததன் பெரும் பேறு என்றுணர்ந்தேன்.

நேர்மையான – நீதியான – தமிழினத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக – ஈழத் தமிழினத்தின் தலைவனாக இருக்கும் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பதவியைப் பறிக்க பதறுகள் முடிவு செய்தன என்ற போது,

ஒரு கணப்பொழுதில் வடக்கு மாகாணம் முடங்கியது. யாரும் எங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. எங்கள் தலைவனுக்காக நாங்களே கடைகளைப் பூட்டுகிறோம்; போக்குவரத்துச் சேவையை நிறுத்துகிறோம்; பாடசாலைகள், கல்விச்சாலைகள் எதுவும் இயங்கா! என்றுரைத்து ஒருகணப்பொழுதில் வடக்கு மாகாணத்தை ஒட்டுமொத்தமாக முடங்கச் செய்த தமிழ் மக்களின் காலம் உணர்ந்த செயல் கண்டு,

ஓ...! பெற்றேன் ஈழத் தமிழனாய் பிறந்ததன் பேறு என்றுணர்ந்தேன். பெறற்கரிய மானிடப் பிறப்பிற்கு இப்பேறு போதுமா? என்ற குறை ஏற்பட்டால்,

இதனையும் ஏற்றிடுக! என்பது போல், நேற்றைய தினமே நல்லூரில் அலையெனத் திரண்ட மக்கள், தலைவா! எதைக் கொடுத்தும் உனைக் காப்போம் என்று உணர்வுபூர்வமாக – மனப்பூர்வமாக அண்டம் அதிர,

வானுலகத்தார் இஃதென்ன வடக்கில் பேரெழுச்சி என்று எட்டிப் பார்த்து பிரமிக்க,

ஐயகோ! எந்தப் பிரகிருதிகள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து, பழுத்த தமிழரசுக் கட்சியை விழுத்த முயற்சி எடுத்தார் என்று; அக்கட்சிக்குள் குறையும் குற்றமும் கொப்பளிக்க,

விட்டிடு... விட்டிடு... விசர் வேலை, பார்த்ததெல்லாம் அதுதான் என்று கூட்டமைப்பின் தலைவர் குறையளக்க,

சித்தார்த்தா, சிறிதரா, நிர்மலநாதா தூது செல்லுங்கள். கட்சிக்கு ஏற்பட்ட களங்கத்தை; மக்களின் கடும் எதிர்ப்பை சமாளிக்க, விழுந்தாலும் ரோசமும் மானமும் இல்லா மீசையில் மண் பட்டால் என்ன? படாமல் விட்டால் என்ன? ஐயாவைச் சந்தித்து அமைதிப்படுத்துக என்று முயற்சி நடக்குமளவில், நீண்ட பெரும் மக்கள் பேரெழுச்சி கண்ட பேறு, ஈழத் தமிழனாய் பிறந்த எனக்கு பெரும் பேறு என்றுணர்ந்தேன்.

ஓ! எங்கள் தலைவன் ஒரு கணம் கண் கலங்கிய போது, காளத்திக் கண்ணப்பனுக்கு ஈடாய் எங்கள் தமிழ் இளைஞர்களின் இதயம் சூடாகி கொதித்த குருதி, அவர் தம் கண்களில் கண்ணீராய் வெளிக்கிட்டதைக் கண்ணுற்ற போது, ஐயனே! ஈழத் தமிழனாகப் பிறந்த பெரும் பேறு பெற்றேன்.

# தற்போதைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் பேரவை அரசியல் செயற்பாட்டை தீவிரப்படுத்த வேண்டும்

## அருட்தந்தை சக்திவேல் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் பேரவை தனது ஆக்கபூர்வமான அரசியல் செயற்பாட்டினை தீவிரப்படுத்த சிவில் சமூகத்தினருடனும் மக்கள்சக்தியை ஒன்றிணைத்தல் வேண்டும்.

இதுவே மாற்று அரசியல் சக்தியாக உருவெடுப்பதோடு இழந்து போனவற்றை பெற்றுக் கொள்ளவும் அரசியல் கௌரவத்தை அடையவும் வழிவகுக்கும் என மலையக சமூக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் அருட்தந்தை மா.சக்திவேல் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாணசபையின் முதலமைச்சருக்கு எதிராக மாகாண சபை உறுப்பினர்கள் செயற்படும் முறையானது நீண்டகால திட்டமிடலின் வெளிப்பாடாகும். இச்செயலுக்கு மாவை சேனாதிராஜாவின் தமிழரசுக் கட்சி நேரடியாக பங்குக் கொள்வதோடு சம்பந்தன், சுமந்திரன் உடந்தையாக நிற்கின்றனர்.

தற்போது எழுந்துள்ள நிலையினை இனவாதிகள் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய சூழலுக்கு காரணமானவர்கள் தமிழ் இன தேசியத்திற்கும் அதனையொட்டிய மக்களின் அடையாளங்களுக்கும் துணை போகும் தமிழின துரோகிகள் என மலையக சமூக ஆய்வு மையம் அடையாளப்படுத்துவதோடு அவர்களின் செயலை வன்மையாக கண்டிக்கின்றது.

முதலமைச்சர் அவர்களின் மாகாணசபையை தூய்மை செய்யும் செயற்பாட்டிற்கு வரவேற்பளிப்பதோடு அவருக்கு துணை நிற்பவர்கள் அடுத்த கட்ட செயற்பாட்டிற்கும் தமது ஆதரவை நல்கவேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறது.

வடமாகாண முதலமைச்சர் கட்சிசார் அரசியல்வாதி அல்ல. தற்செயலாக கட்சிக்குள் உள்வாங்கப்பட்டு தமிழ் மக்களின் அமோக ஆதரவோடு முதலமைச்சராக செயற்படுகின்றார். இவரின் தமிழர் தேசியம் சுயநிர்ணய உரிமை, இன அழிப்பு, நில ஆக்கிரமிப்பு தொடர்பான நிலைப்பாடும் அது சார்பான செயற்பாடும் இணக்க அரசியல்வாதிகளால் தெற்கின் ஆட்சியாளர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவர்களின் நீண்டகால சதித்திட்டமே முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாக் கடிதத்தின் கையளிப்பு எனலாம். சூழ்ச்சியாளர்களின் செயற்பாட்டிற்கு மாகாண சபை உறுப்பினர்கள் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளனர். நம் இனத்திற்குள்ளேயே நாடகமாடும் பசுத்தோல் போர்த்த துரதிர்ஷ்ட மிருகங்கள் துரத்தப்படல் வேண்டும்.

இத்தகைய செயற்பாடு ஒரே நேரத்தில் தெற்கின் சக்திகளுக்கு எதிராகவும் அயலகத்திற்கு எதிராக்வும் சமகாலத்தில் நடத்தப்படும் போராட்டமாக அமையும். ஆகவே தமிழ்மக்கள்பேரவை தமது ஆக்கபூர்வமான அரசியல் செயற்பாட்டினை தீவிரப்படுத்த அரசியல்மயமான சிவில் சமூக மற்றும் கல்வியியலாளர் சமூகம் மக்கள் சக்தி ஒன்றிணைதல்வேண்டும்.

இதுவே மாற்று அரசியல் சக்தியாக உருவெடுப்பதோடு இழந்து போனவற்றை பெற்றுக் கொள்ளவும் அரசியல் கௌரவத்தை அடையவும் வழி வகுக்குமெனஅவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில** பொக்கணை, ஊரெழு, உரும்பிராய் கிழக்கு, போயிட்டி, கரந்தன், நாவாந்துறை, மீனாட்சிபுரம் வீதி, முத்தமிழ் வீதி, வில்லூன்றி, பண்ணைப்பிரதேசம், பொற்பதி, கோண்டாவில் வோட்டர் வேர்க்ஸ், கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம், கிருஸ்ணன் கோவில் சந்தி பிரதேசம், கோண்டாவில் கலைவாணி வீதி, இராணுவ முகாம், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, யாழ் பல்கலைக்கழக தங்கு விடுதி, இராஜேஸ்வரி திருமண மண்டபம், துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** இரணைமடுவிலிருந்து கொக்காவில் வரைக்கும், மத்தியவங்கி, German Tec, SFHQ இரணைமடு, MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், North Cargill's Agrifoods, 651 வது படைப்பிரிவு முகாம், 652வது படைப்பிரிவு முகாம, இராணுவ பாசறை I, இராணுவபாசறை II, இராணுவ பாசறை, 7வது படையணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** முருங்கன் பிட்டி, மாவிலங்கேணி, பிடாரிக்குளம், அளவக்கை, வாழ்க்கைப்பட்டான்கண்டல், பள்ளங்கோட்டை, நானாட்டான், சாளம்பன், நாகசெட்டி, எருவட்டான், அறுகுக்குன்று, நொச்சிக்குளம், அச்சங்குளம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## இராணுவ வீரர் கஞ்சாவுடன் கைது

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று மதியம் 12.30 மணியளவில் கஞ்சாவுடன் இராணுவ வீரர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கிளிநொச்சி அக்கராயன் இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவ வீரர் தரங்ககுமார செனவிரத்ன (வயது-33) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

நேற்று விடுமுறையையடுத்து அவரது சொந்த ஊரான மதவாச்சி நோக்கி பேருந்தில் பயணித்த சமயத்தில் வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று மதியம் 12.30 மணியளவில் வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து 16 பையில் பொதி செய்யப்பட்ட 25 கிராம் கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட இராணுவ வீரரை இன்றைய தினம் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்





நட்சத்திரம்: அச்சுவினி முதல் சுப நாள் வைத்துள்ள நட்சத்திரம் வரை எண்ணிக் கொள்ளவும்.

லக்கினம்: மேஷம் முதல் சுபநாள் வைத்துள்ள லக்கினம் வரை எண்ணிக் கொள்ளவும்.

கிழமை, திதி, நட்சத்திரம், லக்கினம் இவற்றின் தொகையை கூட்டிக் கொள்ளவும். இதனுடன் லக்கின துருவத்தையும் கூட்டிக்கொள்ளவும். மொத்த எண்ணிக்கையை 9 ஆல் வகுக்கவும். மீதத்தொகை 3,5,7 ஆக வந்தால் மிகச் சிறப்பு.

**லக்கின துருவம்** மேஷம்-5, ரிஷபம்-7, மகம்-2, கும்பம்-4, மீனம்- மற்ற ராசிகளுக்கு துருவம் இல்லை.(தொடரும்)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அந்தணன் ஒருவனால் நம் இருவருக்கும் பிரிவு உண்டாயிற்று. ஆதலால் அவனி வாழ் அந்தணர்கள் அனை வரும் வேத முறைகளை விடுத்து. கல்வியைக் காசுக்கு விற்று வாழ்வார்களாக ... என்று சபித்தாள்.

அதன்பின் திருமகள் நாராயணன் பேரில் கொண்ட நன்மதிப்பையும் அத்தனை ஆசைகளையும் அகற்றிவிட்டு கேசவன் கெஞ்சக் கெஞ்ச...

அவன் மொழிகளைச் சிறிதும் ஏற்காமல் தான் வாழ்ந்த வைகுண்டத்தைத் துறந்து சென்றாள்.

அப்புறம்? (தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ உலகம் வேண்டுவது ஒழுக்கமே. கொழுந்து விட்டெரியும் அன்பு தன்னலமற்ற அன்பு யாரிடம் இருக்குமோ, அவரையே உலகம் வேண்டி நிற்கின்றது. அத்தகைய அன்பே வாயிலிருந்து எழும் வார்த்தை ஒவ்வொன்றையும் மிகச் சிறந்த பயனுள்ளதாக்கும். எழுமின், விழிமின் வீரர்களே! உலகம் துயரத் தீயால் வேகின்றதே, நீங்கள் தூங்கலாமா?

❖ [illegible] மேலும் மேலும் நாடுவதையே என்னிடம் காண்கின்றேன். பெரிய மனிதர் ஒருவர் [illegible] உடுக்கிறார் என்பதையும் அறியவே எனக்கு விருப்பம். சேர் பிலிப் சிட்னி என்பவரின் பெருமையைக் காண விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டத்தில் மற்றுமொரு சாதனையை படைத்தது இளங்கதிர்

வல்லை ரேவடி விளையாட்டுக்கழகமானது வல்வைக்குட்பட்ட கழகங்களிற்கிடையே 7 நபர் கொண்ட உதைபந்தாட்டதொடரை நடத்தி வருகின்றது. அந்த வகையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் இளங்கதிர் B அணியினை எதிர்த்து ரேவடி A அணியானது மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் இளங்கதிர் Bஅணியானது 2-0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது


.இளங்கதிர் B சார்பாக வி.தனுசன் . ச.தனுசன் தலா 1 கோல்களை பதிவு செய்தனர். அதனைத் தொடர்ந்து இரண்டாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் இளங்கதிர் A அணியினை எதிர்த்து றெயின்போஸ் அணி மோதியது. ஆட்டத்தின் பெரும்பகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த இளங்கதிர் A அணியானது 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அவ்வணியும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

.இளங்கதிர் A அணி சார்பாக அதிகபட்சமாக பிரசாந்த் 4 கோல்களை பதிவு செய்தார்.

கடந்த வாரம் சுழல் கிண்ணத்தினை தொடர்ச்சியாக 3 வருடங்கள் வெற்றி கொண்டு அதனை சொந்தமாக்கிய சாதனையை படைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க)



## இந்தோனேசிய ஓபன் பட்மின்டன் 2 -வது சுற்றில் சாய்னா தோல்வி



ஜகார்தாவில் நடை பெற்று வரும் இந்தோனேசிய ஓபன் பட்மின்டன் தொடரில் இந்தியாவின் முன்னணி வீராங்கனை சாய்னா நேவால் தோல்வியடைந்துள்ளார்.

இந்தோனேசிய ஓபன் பட்மின்டன் தொடர் இந்தோனேசியாவில் உள்ள ஜகார்தாவில் நடைபெற்று வருகிறது. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் முன்னணி வீராங்கனை சாய்னா நேவால், தாய்லாந்தின் நிட்சாயான் ஜிண்டாபோலை எதிர் கொண்டார்.

முதல் செட்டை சாய்னா நேவால் 15-21 என இழந்தார். இதனால் 2-வது செட்டில் மிகவும் ஆக்ரோஷமாக விளையாடினார். இதனால் 2-வது செட்டை 21-6 என எளிதில் கைப்பற்றினார். ஆனால் 3-வது செட்டை 16-21 என இழந்து 2-வது சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பிரண்ணாய், கிதாம்பி ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர். (க)

## நவரத்தினராசா ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் மறைந்த வலிகாமம் லீக்கின் முன்னாள் தலைவர் அமரர் நா.நவரத்தினராசா ஞாபகார்த்தமாக வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஏற்பாடுசெய்துள்ள "தலைவர் கிண்ணம்-2017" (President cup) உதைபந்தாட்ட தொடர் இன்று 17.06.2017 (சனி.ஞாயிறு தினங்களில்) மாலை 3:30 மணியளவில் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடை பெறுகிறது.

இன்று சனிக் கிழமை மாலை 3:30 மணிக்கு நடை பெறும் போட்டியில் இளவாலை ய்ங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக்கழகம்மாலை 4:30 மணிக்கு நடை பெறும் போட்டியில் வதிரி டயமட்ன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அராலி பாரதி விளையாட்டுக்கழகமும் ஞாயிறு மாலை 3:30க்கு நடைபெறும் போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து எதிர் வேலணை ஐயனார் விளை யாட் டுக்கழகமும் 4:30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஊரெளு றோயல் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென் அன ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# 8000 ஓட்டங்களை கடந்து கப்டன் விராட் கோலி சாதனை

## டிவில்லியர்ஸ் சாதனை முறியடிப்பு



அதிவேகமாக 8000 ரன்களை கடந்து இந்திய அணியின் கப்டன் விராட் கோலி புதிய சாதனை படைத்துள்ளார். இதற்கு முந்தைய டிவில்லியர்ஸின் சாதனையையும் கோலி முறியடித்தார்.

சாம்பியன்ஸ் கோப்படை கிரிக்கெட் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பங்களாதேசத்தை இந்தியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி தோற்கடித்தது. இந்த போட்டியில் ரோகித் சர்மா சதம் விளாசினார். இந்த போட்டியில் 96 ரன்களை எடுத்த கப்டன் கோலி 8 ஆயிரம் ரன்களை அதிவேகமாக கடந்து சாதனை படைத்துள்ளார்.


இந்த போட்டியில் 88 ரன்களை சேர்த்த போது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 8 ஆயிரம் ரன்களை கடந்தார். தனது 175-வது இன்னிங்சில் இந்த இலக்கை கடந்த விராட் கோலி இதன் மூலம் ஒரு நாள் போட்டியில் அதிவேகமாக 8000 ரன்களை எடுத்த வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார்.

இதற்கு முன்பு தென் ஆப்பிரிக்க கேப்டன் ஏ பி டிவில்லியர்ஸ் 182 இன்னிங்சில் இந்த இலக்கை தொட்டதே சாதனையாக இருந்தது. அதை கோலி முறியடித்து இருக்கிறார்.

இந்திய தரப்பில் சவுரவ் கங்குலி 200 இன்னிங்சிலும், சச்சின் டெண்டுல்கர் 210 இன்னிங்சிலும், தோனி 244 இன்னிங்சிலும் 8 ஆயிரம் ரன்களை கடந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

28 வயதான விராட் கோலி இதுவரை 27 சதங்கள், 42 அரைசதங்கள் உட்பட 8,008 ரன்கள் சேர்த்துள்ளார். (க)

# டோனியின் கையுறையால் வந்த வினை



சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் அரைஇறுதியில் டோனி பயன்படுத்திய கையுறை களத்தடுப்புக்கு இடையூறு ஏற்படுத்திய தால் எதிரணிக்கு 5 ரன்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

இப்போட்டியில் 40-வது ஓவரின் ஐந்தாவது பந்து வீச்சில் பங்களாதேச வீரர் மக்முதுல்லா அடித்து விட்டு ரன் எடுக்க ஓடினார். அப்போது பந்தை பீல்டிங் செய்த யுவராஜ்சிங் விக்கெட் கீப்பர் டோனி வசம் எறிந்தார். பொதுவாக இது போன்ற சமயத்தில் டோனி ஒரு கையுறையை (குளோவ்ஸ்) கீழே கழற்றி போட்டு விட்டு பந்தை பிடித்து ரன்-அவுட் செய்ய முயற்சிப்பது வழக்கம்.

அதே போலவே இந்த ஆட்டத்திலும் ஒரு கையுறையை கழற்றி போட்டார். துரதிர்ஷ்டவசமாக, ஸ்டம்பை நோக்கி அவர் வீசிய பந்து அருகில் கிடந்த கையுறையில்பட்டு விட்டது. ஹெல்மெட், கையுறை உள்ளிட்ட உபகரணங்களை பீல்டிங்குக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஒரு அணி பயன்படுத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி இந்தியாவை தண்டிக்கும் (பெனால்டி) வகையில் எதிரணிக்கு 5 ரன் இலவசமாக வழங்கப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலமைச்சருடன்...

தெரிவித்துள்ள த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அது தொடர்பில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் விரைவில் இணக்கம் ஏற்படும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தனிடம் நேற்றிரவு தொடர்பு கொண்டு கேட்டபோது இவ்விடயம் சம்பந்தமாக அவர் கூறுகையில், இது தொடர்பில் கூட்டமைப்பு முடிவெடுக்க வேண்டும். குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆனால் குற்றவாளிகளாக்கப்படாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதானால் அவர்களுடைய பதவிக்கு ஏற்புடையதல்ல. அவர்களுக்கு மாறாக எடுப்பதை அவர்களைப் பொறுத்தவரையிலோ அல்லது கட்சிக்கோ ஏற்புடையதல்ல. ஆனால் இவ்விடயத்தை சுமுகமாக தீர்ப்பதற்கு விரும்புகின்றோம். அந்த முடிவும் முதலமைச்சர் கையில் தான் உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். (செ-11)

## இணக்க...

ளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்தித்து இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (நு)

## முதலமைச்சரை வீழ்த்த...

அறிக்கை ஒன்றை நேற்றையதினம் அவரே ஊடகங்களிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் வடக்கு மாகாண சபை முதல்வருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பல்வேறுபட்ட சூழ்ச்சிகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் அந்த அறிக்கை முழுமையாகப் பிரசுரிக்கப்படுகிறது.

தலைவர்

வடக்கு மாகாண சபை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு, பிரதம செயலாளர் அலுவலகம்; வடக்கு மாகாண சபை. 15.01.2017

வடக்கு மாகாண சபை அமைச்சர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற விசாரணைக்குழுவிற்கு சாட்சியம் அழிப்பதற்காக பொய்ச் சாட்சியங்கள் தயாராகி வருவதாக இலத்திரனியல் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்த நிலையில் விசாரணைக்குழுவுக்கு இந்த அறிக்கையை சமர்ப்பிக்க முன்வந்துள்ளேன்.

வடக்கு மாகாண சபையால் 09.02.2016 அன்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் தொடர் விளைவாக வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாண சபையின் யாழ்.மாவட்ட மாகாண சபை உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக்குழு உறுப்பினரும் நிதிச் செயலாளரும் ஆகிய கே.என்.விந்தன் கனகரத்தினம் ஆகிய நான் தங்களுக்குத் தெரியப்படுத்துவதாவது,

கடந்த 08.02.2016 அன்று யாழ்.சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலகத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கான கூட்டம் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடந்து முடிந்த பிற்பாடு சக மாகாண சபை உறுப்பினரான பா.கஜதீபன் அவர்களின் முச்சக்கரவண்டியில் எனது அலுவலகத்திற்குச் செல்வதற்காக ஏறியபோது திடீரென உறுப்பினர் கஜதீபன் அவர்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததன் காரணமாக அவர் தொலைபேசியில் பேசுவதற்காக இறங்கிச் சற்றுமுன்னால் சென்றுவிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் முதலமைச்சரின் அலுலகத்துக்கு எதிர்ப்பக்கமாக உள்ள வளவிற்குள் மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் அவர்களின் கார் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்குள்ளிருந்து மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அவர்கள் என்னை நோக்கி வந்து உங்களோடு ஒரு முக்கியமான விடயம் கதைக்க வேண்டும் என அழைத்துச் சென்று ஆனோல்ட் அவர்களின் காருக்குள் அமரச்செய்தார். அப்போது காருக்குள் மாகாண சபை உறுப்பினர்களான ஆனோல்ட், சயந்தன் ஆகியோரும் இருந்தனர்.

அந்தவேளையில் உறுப்பினர் பரஞ்சோதி அவர்களும் அவ்விடத்திற்கு வர அவரையும் அழைத்து உள்ளே அமரவைத்தனர். இதன் பின் அஸ்மின் அவர்கள் என்னிடம் கூறுகையில்,

முதலமைச்சரின் கொட்டத்தை அடக்க வேண்டும். அவரை அரசியல் அரங்கிலிருந்து அகற்ற வேண்டும். அவரின் நடவடிக்கைகள், போக்குகள் எம்மை மீறிச் செல்கின்றன. அவருக்கு பக்க பலமாக அமைச்சர் ஐங்கரநேசன் இருந்து செயற்படுகிறார். முதலில் ஐங்கரநேசனை வீழ்த்த வேண்டும். அதற்கு சில வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும். அதற்கு நீங்கள் தான் பொருத்தமான ஆள். சுமந்திரன் சேர் உம் உங்கள் மீது நல்ல நம்பிக்கை வைத்துள்ளார். எனக் கூறி அமைச்சர் ஐங்கரநேசன் அவர்கள் மீது சில குற்றச்சாட்டுக்களை எல்லோரும் கூட்டாக சொல்லிக்கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்லாது முதலமைச்சரின் வலக்கை ஐங்கரநேசன் தான். எனவே வலக்கையை உடைக்க வேண்டும் என அமர்ந்திருந்த ஆசனத்தின் கைப்பிடியை தட்டிக்காட்டினார் அஸ்மின். வலக்கையை உடைத்தால் ஆசனத்தில் இருந்து முதலமைச்சரை இலகுவில் வீழ்த்தி விடலாம் எனவும் கூறினார். இவற்றினை இவர்கள் கூறிக்கொண்டிருந்தபோது உறுப்பினர்கள் ஆனோல்ட்டும் சயந்தனும் வாங்கோ யு.எஸ் ஹோட்டலில் நாங்கள் சந்தித்துப் பேசுவோம் என்றனர். அப்போது நான் கூறினேன் அலுவலகம் செல்வதற்கு என்னிடம் தற்போது வாகனம் இல்லை. கஜதீபனின் வாகனத்தில் தான் செல்ல வேண்டும் என்று கூற இல்லை. யு.எஸ்.ஹோட்டலில் சந்திப்பு முடிய உங்களை உங்கள் அலுவலகத்தில் இறக்கிவிடுவோம் என்று கூறினர். பின்பு நாம் எல்லோரும் யு.எஸ்.ஹோட்டலுக்குச் சென்றோம். யு.எஸ்.ஹோட்டல் மேல் தளத்தில் பிரத்தியேகமாக எமக்கு ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. நாங்கள் அந்த இடத்திற்கு சென்றபோது மாகாணசபை உறுப்பினரும் தற்போதைய பிரதி அவைத் தலைவருமான கமலேஸ்வரனும் அவ்விடத்திற்கு வந்தார். எல்லோரும் நாம் கூடிப் பேசிக்கொண்டிருந்தபோது,

என்னை நோக்கி மீண்டும் ஆனோல்ட், சயந்தன் மற்றும் அஸ்மின் ஆகியோர் ஐங்கரநேசன் அவர்களுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்களைச் சொல்லி அவருக்கு எதிராக ஒரு பிரேரணையை சபையில் கொண்டு வரும்படியும் என்னை வலியுறுத்தினர். குற்றச்சாட்டுக்களைக் குறிப்பிடுமாறு நான் வினவிய போது பல குற்றச்சாட்டுக்களை மாறி மாறி மூவருமாகச் சொன்னார்கள்.

அக்குற்றச்சாட்டுகள் அடிப்படையிலேயே ஆதாரங்கள், ஆவணங்கள், நம்பிக்கைத் தன்மை ஏதுமில்லாமல் உண்மைக்குப் புறம்பானதும் ஒரு கற்பனை ரீதியிலான எழுந்தமான வாய்மூல குற்றச்சாட்டுகளாகவும் அவர் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாகவே இவர்களின் குற்றச்சாட்டுக்கள் அமைந்து காணப்படுவதாகவும் எனக்குத் தென்பட்டதால் நான் இப்பிரேரணையைக் கொண்டு வர மாட்டேன் என நிராகரித்துவிட்டேன்.

உடனே அதிலே இருந்துகொண்டு, தமிழீழ மக்கள் விடுதலைக்கழக (புளொட்) கட்சி சார்ந்த உறுப்பினரும் வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினருமாகிய ஜி.ரி.லிங்கநாதன் அவர்களுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு அஸ்மின், ஆனோல்ட் மற்றும் சயந்தன் போன்றோர் மாறி மாறி அவருடன் உரையாடினார்கள். உரையாடலிலே அமைச்சர் ஐங்கரநேசன் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அவர் பிரேரணையாகக் கொண்டுவரவேண்டும் என்றும் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய பிரேரணையை தாம் இரவோடு இரவாகத் தயாரித்து அவருக்கு மறுநாள் சபை அமர்வில் சமர்ப்பிக்க மின் அஞ்சல் ஊடாக அனுப்பிவைப்பதாகவும் குறிப்பிட்டனர். அத்தோடு சில ஆசைவார்த்தைகளையும் அவர்கள் குறிப்பிடத்தவறவில்லை. உங்கள் மீது எங்கள் கட்சித் தலைமைக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. சுமந்திரனும் நன் மதிப்பு வைத்திருக்கின்றார். நாங்கள் இப்பிரேரணையைக் கொண்டுவந்தால் தமிழரசுக்கட்சி, சுமந்திரன் அணி என இணையத்தளங்களும் பத்திரிகைகளும் எங்களை விமர்சிக்கும் எனவே நீங்கள் தான் கொண்டு வரவேண்டும். உங்களைத்தான் அடுத்த விவசாய அமைச்சராக்குவதற்கும் தாங்கள் யோசித்திருப்பதாகவும் அவரிடம் தெரிவித்தார்கள். அத்தோடு அருகில் விந்தன் அண்ணையும் இருக்கின்றார். அவரும் இதற்கு ஆதரவு என்ற ஒரு பொய்யையும் கூறினார்கள். அத்தோடு யார், யார் அங்கு கூடியிருக்கின்றோம் என்ற விடயத்தினையும் தொலைபேசி ஊடான அந்த உரையாடலில் அவர்கள் அவருக்குத் தெரிவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் மாகாணசபை அமர்வில் சபை ஒழுங்குப்பத்திரத்தில் இவ்விடயத்தைச் சேர்க்காமல் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகக் கருதி, அமைச்சர் ஐங்கரநேசன் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கவேண்டும் என்றும் அதற்கு ஒரு குழுவை முதலமைச்சர் நியமிக்கவேண்டும் என்றும் லிங்கநாதன் அவர்கள் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

குறித்த பிரேரணை கொண்டுவந்த முறைமையை ஆட்சேபித்து பின்னர், பல மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு ஆட்சேபனைக் கடிதம் ஒன்றை வழங்கியிருந்தமையையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதன் பிற்பாடு நீண்டகாலமாக அமைச்சர் ஐங்கரநேசன் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்களை லிங்கநாதன் அவர்களும் இதை ஆதரித்து நின்றவர்களும் முதலமைச்சர் அவர்களிடம் கையளிக்கவில்லை. தற்பொழுது எல்லா அமைச்சர்களையும் விசாரிக்கும் முகமாக முதலமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்ட குழுவிடம் சாட்சியங்கள் பதியப்படுவதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அதேவேளையில், பல நபர்கள் பொய் சாட்சியங்களை பதிவுசெய்வதாகவும் இணையத்தளங்களில் செய்திகள் வெளிவந்தநிலையில் இத்தகவலையும் தங்களின் கவனத்திற்கு ஆவணமாக நான் சமர்ப்பிக்கின்றேன் என உறுப்பினர் விந்தன் அதில் தெரிவித்துள்ளார். (செ-11)

## புலம்பெயர்ந்தோர்...

புலம்பெயர் இளையோர் அமைப்புக்களுடன் இணைந்து புலம்பெயர் பொது அமைப்புக்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் சர்வதேச நாடுகளில் அவசர ஒன்று கூடலை மேற்கொண்ட புலம்பெயர் அமைப்புக்கள் மேற்படி விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

தாயகத்தின் வடமாகாண சபையில் ஏற்பட்டுள்ள எதிர்மறைச்சூழல் என்பது மீதமிருக்கும் தமிழ்த் தேசியத்தின் வழிகாட்டல்களை, தங்களின் பதவிக்காகவும் சுயநலத்திற்காகவும் தமிழர் விரோத சக்திகள் திட்டமிட்டு சூறையாட முற்பட்டுள்ளன.

அதனைக் கண்டித்து அதற்கான தீர்ப்பை வழங்கிய வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் பதவியில் இருந்து விரட்டுவதற்கு சில சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு எமது மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைவர்களும் உடந்தையாக உள்ளார்கள் என்பது வேதனைக் குரிய விடயம்.

ஆகவே இதனைக் கண்டித்தும் முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் நீதியான செயற்பாட்டை ஆதரித்தும், புலம்பெயர் தமிழர்கள் எப்போதும் நீதியின் பக்கம் நிற்பார்கள் என்பதை எடுத்துரைக்க சர்வதேசத்தில் வாழும் இளையோர்களாகிய நாம் ஒன்று கூடுவோம்.

இந்த இக்கட்டான சூழலில் புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தில் வாழும் எமது உறவுகளுக்கு துணையாக இருப்போம் எனும் செய்தியை உரக்கச் சொல்வோம்.

நாங்கள் வாழும் இந்த புலம்பெயர் ஏக போக வாழ்வை தந்தவர்கள் இன்று வஞ்சிக்கப்படுகிறார்கள். உலகப்பரப்பில் வாழும் தமிழர்கள் எப்போதும் நீதியின் பக்கம் நிற்பார்கள் என்பதை மீண்டும் ஒரு முறை உலகுக்கு எடுத்துரைக்க ஓர் அணியில் இணைவோம்.

உலகநாடுகள் அனைத்திலும் உள்ள தமிழர்கள் விக்கினேஸ்வரனின் கைகளை பலப்படுத்துவோம். காரணம் அவர் நீதியை நிலைநாட்ட அநீதியை எதிர்த்து எடுத்த காத்திர மான முடிவுகளை மக்கள் வெகுவாக வரவேற்கின்றனர்.

அவருக்கு எதிராக பிரச்சினை எழும் போது மாணவர்கள் உட்பட அனைத்து மக்களும் அவருக்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தமையானது நீதியான செயற்பாட்டை உணரக்கூடிய வகையில் உள்ளது.

அந்த வகையில் புலம்பெயர் தமிழர்களும் தாயகமக்களின் நீதியான செயற்பாட்டிற்கு உறுதுணையாக நின்று நீதி நிலைத்து அநீதி ஒழிய உழைத்திடுவோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## மக்கள் புரட்சி...

மற்றும் கண்டன போராட்டங்களில் பங்கேற்றிருந்த மக்கள் திரள்வு தமிழரை அடக்க நினைப்பவர்களுக்கு ஒரு பாடத்தை புகட்டியுள்ளதாக தெரிவித்துள்ள தமிழ் மக்கள் பேரவை இதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி கூறியுள்ளது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை நேற்றிரவு விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

வடக்க முதலமைச்சரின் நிலைப்பாடுகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுவரும் சதி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், முதலமைச்சரின் கோட்பாடுகளுக்கான மக்கள் ஆதரவை வெளிப்படுத்தியும் நேற்று நடைபெற்ற கடையடைப்பிற்கு எமது கோரிக்கையை ஏற்று ஒத்துழைப்பு தந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

காலநெருக்கடி மிகுந்த சூழலில், மிகக் குறுகிய முன்னறிவித்தலின் மத்தியிலும், தாமாக முன்வந்து ஆதரவு வெளிக்காட்டியவர்த்தகப் பெருமக்கள்,போக்குவரத்து சங்கங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழக சமூகம், ஊடகங்கள் செயற்பாட்டாளர்கள் மற்றும் அனைவரும் ஒன்றுதிரண்டு சதிகள் மூலம் தமிழரை அடக்கியாள நினைப்பவர்களுக்கு ஒரு பாடத்தையும் காட்டியுள்ளனர்.

தமிழ் தேசியக் கொள்கைகளை நேர்மையுடன் முன்னெடுக்கும் விக்னேஸ்வரன் மீது மக்கள் கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடாக அமைந்த இந்த எழுச்சி, தமிழ் மக்கள் பேரவைக்கு உரியது அல்ல, இது தமிழ் சமூகத்தின் சுய எழுச்சி. ஆழ்ந்த அரசியல் தெளிவுடன் கூடிய இந்தவிழிப்புணர்வும் எழுச்சியும் இருக்கும் வரை எந்தக பட நாடகங்களும் எம்மை வீழ்த்த முடியாது எனும் நம்பிக்கையை மீண்டும் உறுதி செய்துள்ளது.

இதற்காக உழைத்த அனைவருக்கும் நாம் தலைசாய்த்து பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (செ-11)

## சுமந்திரனிடம்...

மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானத்தை இலங்கை தமிழரசுக் கட்சி கொண்டுவந்தமை தொடர்பில் அவர்களுடைய தற்போதைய நிலைப்பாடு என்ன என்பதை மக்களின் கோரிக்கைக்கு அமைவாக வடமாகாண சபை தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டிருந்தோம்.

இதன்போது பேசிய வட மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி கே.சயந்தன் தமது கட்சியின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனிடமே கேளுங்கள் என பதில் தெரிவித்தார்.

ஏனைய உறுப்பினர்களுக்கு தொடர்பினை ஏற்படுத்திய போது பலர் கருத்து கூற முடியாது என தெரிவித்திருந்ததுடன் பெரும்பாலான உறுப்பினர்களுடைய தொலைபேசிகள் நீண்ட நேரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-9)

## முல்லையில் இன்...

தீவு மாவட்ட செயலகம் முன்பாக கண்டனப் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் அறிவிப்பை வெளியிட்ட வட மாகாணசபை உறுப்பினர் சிவநேசன்,

தமிழ் மக்களின் அமோக ஆதரவை கடந்த தேர்தலில் பெற்று நம்பிக்கைக்குரியவராக விளங்குபவர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆவார்.

அவரின் தமிழ்த் தேசிய அபிமான செயற்பாடுகளை கண்டு சிங்களப்பேரினவாதிகள் முதலமைச்சரை கைது செய்யும்படி மேடை மேடையாக பேசிவருகின்றார்கள்.

சட்டப்படி அவரை கைது செய்ய காரணம் இல்லாததால் பேரினவாதிகள், தமிழரசுக் கட்சியின் மூலம் முதலமைச்சரை பதவி நீக்க முற்படுகின்றார்கள்.

மேற்படி தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக முதலமைச்சரை பதவிநீக்க எடுக்கப் படும் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க இன்றைய தினம் முற்பகல் 9 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலக வளாகத்துக்கு முன்னால் தமிழ்த் தேசிய அபிமானிகளை ஒன்றுகூடும்வண்ணம் விநயமாக கேட்டுக்கொள்கின்றேன் என உறுப்பினர் சிவநேசன் அழைப்பு விடுத்துள்ளார். (செ-11)

# கடமையை செய்....

வெற்றியும் இல்லை என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர், நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், மக்கள் நலன் சார்ந்த சகல நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுப்பேன் என அலைகடலெனத்திரண்ட மக்கள் முன் உறுதி அளித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கண்டித்தும், முதலமைச்சருக்கான தங்கள் பேராதரவை வெளிப்படுத்துமுகமாகவும் தமிழ் மக்கள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டனப் பேரணி நேற்றைய தினம்காலை இடம்பெற்றது.

இந்தப் பேரணியில் கலந்து கொண்டு நல்லூரில் அமைந்துள்ள முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தின் மத்தியில் முதலமைச்சர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இங்கு திரண்டிருக்கின்ற ஜனக்கூட்டத்தைப் பார்க்கும் போது, இது வரை காலமும் நாங்கள் செய்ததற்கு ஒரு அர்த்தம் இருக்கின்றது என்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது. இந்தச் சேவையைத் தொடர்ந்தும் செய்து கொண்டேவருவேன். நாங்கள் எங்களுடைய கடமைகளைச் செய்து கொண்டு வரும் போது பலருக்கு பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

அதனால் தான் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அண்மையில் இங்கு வந்து சென்ற போது விரைவில் விக்னேஸ்வரன் தன்னுடைய பதவியைப் பறிகொடுத்து விடுவார் என்று கூறியிருந்தார்.

அவர் அவ்வாறு கூறும் போது நான் நினைத்தேன் எனக்கும் அவருக்கும் எந்த விதமான பிரச்சினையும் இல்லை. அவர் எதற்காக இவ்வாறு கூறுகின்றார் என்று. இந்த வேளையில் தான் இதன் பின்னணியில் எனக்கு எதிராக கொழும்பில் சதித்திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருப்பதை உணர முடிந்தது. அதனால் தான் அவர் அப்படி கூறியுள்ளார்.

அந்த சதி எவ்வாறு தீட்டப்பட்டது என்றால், சதியில் ஈடுபட்டவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அதாவது எமது அமைச்சர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் குறித்து அறிக்கைகள் வெளிவரவிருக்கின்றது. அது தொடர்பில் முதலமைச்சர் இரண்டு வழிகளில் முடிவெடுத்தாக வேண்டும்.

அமைச்சர்களைக் காப்பாற்றுவதற்காக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதில் எது நடந்தாலும் அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது என்று அவர்கள் நினைத்திருந்தார்கள்.

அதாவது அவர்களைக் காப்பாற்றினால் குற்றம் செய்தவர்களை இவர் காப்பாற்றி விட்டார் என்று அதை ஒரு காரணமாகக் காட்டி முன்னோக்கியிருப்பார்கள். இப்போது அவர்களைத் தண்டிக்கப் போய், அவர்களைத் தண்டித்தால் அது ஒரு பிழை என்ற முறையிலே இப்பொழுது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆகவே இதில்எது நடந்திருந்தாலும்என்னை வெளியேற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்திலே தான் அவர்களுடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அவர்களுடைய எண்ணத்துக்கான பதிலை நீங்கள் கூறிவிட்டீர்கள்.

மக்களுடைய பிரச்சினைகள் பல இருக்கின்றன. அவற்றை நாங்கள் தீர்க்க முனைகின்ற போது எமது வட மாகாண சபையிலும் வேறு இடங்களிலும் தேவையில்லாத விடயங்களைப் பேசிப் பேசிக் காலத்தை வீணடித்து விட்டோம். அந்த அடிப்படையிலே தான் என் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது என்ன நடக்கிறது? எவ்வாறு போகப் போகிறது? என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

ஒன்றே ஒன்றை மட்டும் நான் உங்களுக்குக் கூறுவேன். நாங்கள் தொடர்ந்தும் எங்களுடைய கடமைகளைக் கட்டாயம் செய்வோம். கடமையைச் செய்யும் ஒருவனுக்குத் தோல்வியும் இல்லை. வெற்றியும் இல்லை. அந்த நிலையில் இருந்து நாங்கள் எங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டும் என்று தான் விரும்புகிறோம்.

ஒரு சில விடயங்களை நான் இந்த இடத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இவ்வாறான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கைகளை விடுத்ததும் எங்களுடைய உறுப்பினர்கள் தான். தவறுகள் நடைபெறுவதாக எனக்கு நேரடியாக சொல்லியிருந்தால் கட்டாயம் நடவடிக்கை எடுத்திருப்பேன்.

அதைவிட்டுத் தங்கள் பெயர் பத்திரிகைகளில் வரவேண்டும் என்பதற்காக வட மாகாண சபையை நாறடித்து இயக்கியதனால் தான் நாங்கள் இந்த விசாரணைக்குழுவை அமைத்தோம்.

விசாரணைக்குழு இரண்டு பேரைக் குற்றவாளிகள் என்று தீர்த்தது. மற்றைய இரண்டு பேர் மீதான குற்றச்சாட்டுகளும் நிரூபிக்க முடியாமல் போய் விட்டது. அவர்கள் மீதான முறைப்பாட்டாளர்கள் விசாரணைகளுக்கு வரவில்லை. அதனால் அவர்கள் விடுவிக்கப்பட்டதால், அவர்கள் குற்றவாளிகள் இல்லை என கூறித்திரிகிறார்கள் என்றும் அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று அர்த்தம் இல்லை. அதைவிட அவர்கள் சம்பந்தமாக வேறு வேறு குற்றங்களும் அவர்கள் மீது இப்போது கிடைத்திருக்கிறது. இதுசம்பந்தமாக மேலும் ஒரு விசாரணை நடைபெறும்.

இது வட மாகாணத்தின் முதலாவது மாகாண சபை. இந்த சபையிலே ஊழல் சம்பந்தமாக நாங்கள் நடவடிக்கை எடுக்காமல் விட்டால் தொடர்ந்தும் இதைத்தான் நாங்கள் சந்திக்க வேண்டிவரும். இதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டு வருகிறோம். இவ்வாறான சனக்கூட்டம் எங்களுக்குச் சார்பாக நடக்கும் போது, எங்களுடைய பாதை சரியென்று எனக்குப் படுகிறது.

அன்பார்ந்த தமிழ் மக்களே! உங்களுடைய நலன் சார்ந்த சகல நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன் என்று உங்களுக்கு உறுதிமொழி அளிக்கின்றேன் என தெரிவித்தார். (செ-9)

# மரண அறிவித்தல்



## சுப்பையா தர்மலிங்கம்

யாழ்.வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், சரவணை, மானிப்பாய், கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தர்மலிங்கம் அவர்கள் கடந்த 14.06.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகராணி அவர்களின் கணவரும், தர்மராஜா, சந்திரன் (கனடா), விஜயகௌரி (ஜெயா - கனடா), நந்தகௌரி (நந்தினி) ஜெயராஜா, சுரேஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சண்முகம், குமாரசாமி, சதாசிவம், பாக்கியம், கந்தசாமி, சாந்தலிங்கம் மற்றும் கதிரவேலு (சாமியார்), இராஜலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜினி (ராஜி ), ரவிச்சந்திரன் (ரவி), தவயோகராஜா (ரகு), அமுதவாணி (அமுதா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கெங்காதேவி, பாக்கியலட்சுமி மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற சிவசம்பு, புஸ்பலீலாவதி, கருணாதேவி, காலஞ்சென்றவர்களான ஞானாம்பிகை, நாகரெத்தினம், பாலசுப்பிரமணியம், இராசதுரை மற்றும் இராசம்மா, சிவஞானம், தங்கராணி ஆகியோரின் மைத்துனரும், ஜினோத், வினோத், சுவேதா, தனுஜன், வினோஜன், அக்சனா, மதீஷன், அபிநயா, கபிலன், சிந்தியா, விக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.06.2017 கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :திருமதி த.நந்தினி (மகள்)
மானிப்பாய்.

(9459)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வட மாகாணத்தில் FRENCH EMBASSYயின் கீழ் இயங்குகிறது.
யாரும் படிக்கலாம். www.ambafrance.lk.org
DELF A1, A2 வகுப்புகளுக்கு உடன் பதிவு செய்யவும்.
021 222 8093
61. கச்சேரி - நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.
(9455)

கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள்
திருத்தம் விற்றல் வாங்குதல்
LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
(C-8797)

வெளிநாடுகளுக்கான துரித பிரதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா
(சி-8796)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண்,மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-8791)

கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு
நீங்கள் 46 வயதிற்கு உட்பட்டவரா? குடும்பத்துடன் கனடாவில் குடியேற விருப்பமா? கல்வி மற்றும் தொழில் அனுபவம் உள்ளதா? உடனடியாக பதிவு செய்யுங்கள்.
EXPRESS ENTRY Student Visa
8ம் ஆண்டு வரை படித்தவர்கள் முதல் பல்கலைக்கழக கல்வி முடித்தவர்கள் வரை அனைவருக்கும் கனடாவில் வேலைவாய்ப்புக்களுடன் குடும்பமாக நிரந்தர குடியுரிமை (PR) பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் பல உண்டு. இதுவரை எம்மவர்கள் கனடாவில் குடியேற பயன்படுத்தாத பலகுடியேற்ற வழிமுறைகள் பற்றி
கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் Immigration ஆலோசகரால் உங்களுக்கான வாய்ப்புக்கள் பற்றி முழு விபரமும் விளக்கமும் தரப்படும்.
STUDENT VISA
இன்று-இறுதிச்சந்தர்ப்பம் 17-06-2017 சனிக்கிழமை
V2 Travels
முற்பதிவு அவசியம் - 0768226236 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்
இன்னும் சில ஆசனங்கள் மட்டுமே உள்ளன
(சி-8798)

Win Repair
A/C களும், சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648942
(9458)

யாழ் மதர் கெயார்
Dental Unit
Reg.No.#PV85754
Yarl Mother care
நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட உயர்தர சேவைகள்
● பல் வெண்மையாக்கல் ● பல்,வாய் வைத்தியசேவை
● வேரடைப்பு ● சிறுவர் பற் சிகிச்சை
● மிதப்புப்பல் சீராக்கல் ● மற்றும் பல நவீன சேவைகள்
514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 492 7308
Mob : 077 375 4490, 077 220 2769
(சி-8810)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.